Free Circulation Germany- England
மணி: 72 - ஓசை: 310 ஆடி. July. 2022

# வெற்றிமணி
Vettimaniy
ESTD 1950

28TH years IN EUROPE Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன். B.F.A

Orientalisch
Textilien & Schmuck
32 ஆவது ஆண்டு நிறைவு
தரமும், மலிவும், ஒரே இடத்தில்

Königswall 16 (Am Hbf) 44137 Dortmund
Tel:0231 162377

# அன்று வட,கிழக்கில் அரசு விதித்த தடைகளை நாம் எப்படி எல்லாம் எதிர்கொண்டு வாழ்ந்தோம்!

Dr.கோபிசங்கர் – (யாழ்ப்பாணம்)



Dr.IN

BADMINTON EUROPE

## ஐரோப்பிய பட்மின்ரன் சாம்பியன் போட்டியில் யேர்மன் நாட்டிற்காக விளையாடும் தமிழர்!

புத்திசிகாமணி – (யேர்மனி)

## தீக்குள் விரலை வைத்தால்!

மாதவி – (யேர்மனி)

# S.K.SILKS GOLD PARAADISE

Dortmund நகரில்...

ஆடைகளின் ராஜ்ஜியத்திலே



என்றும் தரமும் மலிவும் நிரந்தரம் நாடுங்கள் மகிழுங்கள்!

S.K.SILKS

Mr.P.Sritharan
Proprietor


Tel: 0231 9501 647

Adler Str 33-44137
Dortmund




# தீக்குள் விரலை வைத்தால்!

## தெறிவினை!



மாதவி

ஒரு பந்தை முகத்திற்கு நேரே எறிந்தால்! நீங்கள் உடன் தடுப்பீர்காளா? அல்லது குனிவீர்களா? தீ தவறுதலாக விரலைச் சுட்டால், உடன் எந்தப்பக்கம் எடுக்க வேண்டும் என்று மூளையுடன் கலந்துரையாடி முடிவு எடுத்து கையை தூக்குவீர்களா?

ஏன் சில பெண்களுக்கு கை கொடுத்தால் கும்பிட்டு வணக்கம் சொல்வார்கள். (அந்தக்காலத்தில்) ஆனால் அதே பெண்களுக்கு சட்டென கைகொடுத்து பாருங்கள், உடன் கைதந்து விடுவார்கள், அந்த இடத்தில் அவர்கள் மூளைக்கு அனுப்பி கருத்து கேட்பதற்கு முன், செயல் பாடு ஒன்றினை இந்த உடல் எடுத்துவிடும்.

நுளம்பு கடித்தால் சட்டென அடிப்பவர் செயல் பாடும் அத்தகையதே. அடித்தவர் ஜீவகாருண்யச் சித்ராவும், இருக்கலாம். இந்த உடல் எடுக்கும், சில செயற்பாடுகள் நன்மை தீமை இரண்டையுமே தரலாம். இந்த விடையம் பற்றி சிந்திக்கத்தூண்டியது எனது நாற்பது வருட நண்பன் ஒருவரது விபத்து மரணம்.

யேர்மனியில் கடந்த மாதம் (02.06.2022) எனது நண்பரது கார் திடீர் என பின்னோக்கி நகர்ந்த போது இந்த விபத்து ஏற்பட்டது.

பின்னோக்கி உருள்வதைக் கண்ட நண்பர், சட்டென பின்னுக்கு ஓடி காரை தடுக்க முயன்றுள்ளார். கார் இறக்கம் நோக்கி நகர்ந்தமையால் வேகம் அதிகரித்து, நண்பரையும், பின்புறமாக தள்ளிவீழ்த்தி, அவருக்கு மேலால் ஏறிச் சென்றது. மிகவும் பாரமான அவுடி கார். வைத்திய சாலைக்கு கெலிகொப்ரல் மூலம் உடன் எடுத்துச் சென்றும் உயிரைக்காப்பாற்ற முடியவில்லை.

இச்சம்பவம் நடைபெற்றபின், கருத்துச் சொல்வார்கள், காரைக் காப்பாற்றச் சென்று உயிரைவிட்டு விட்டார், கார் உருண்டால் என்ன அருகில் நின்று பார்க்க வேண்டியது தானே, கொஞ்சம் யோசித்து இருந்தால் இந்த விபத்தை தடுத்து இருக்கலாம், என்று பல கருத்துக்கள் உலா வந்தன. விபத்து என்றாலே யோசிப்பதற்கு முதல் வருவதே. யோசித்து இருந்தால் விபத்து என்று ஒன்று இல்லையே.


இங்கு நடந்த விபத்து, மூளை யோசித்து செயற்படுவது போலன்றி, முண்ணான் தெறிவினை போன்று, இது தன் இச்சைனயான செயற்பாடு ஒன்று நடைபெற்று இருக்க வாய்ப்புண்டு.

அதனால் சட்டென உருளும் காரை உடன் தடுக்முயன்று உள்ளார். காரின் வேகம் இறக்கத்தில் அதிகரிக்க, புலிவாலைப்பிடித்த மாதிரி மீளமுடியாத நிலை ஏற்பட்டு போராடவேண்டி இருந்திருக்கும்.


எனது நண்பர் சாதாரண மனிதர்களை விட, மிகவும் திட்டமிட்டு நேர்த்தியாக நடக்கும் ஒரு விவேகி.

எனவே இந்த சந்தர்ப்பத்தில் அவர் சாதரண மனிதர்களை விட சிறப்பாக செயற்பட்டு இருக்க முடியும், ஆனால் இந்த விபத்தில் எவருக்கும் உள்ள பொதுவான தெறிவினையே

18 ஆம் பக்கம் பார்க்க...







செல்வராஜா
SELVARAJA GOLD HOUSE

நகைகள் அனைத்தும் நம்பமுடியாத விலைக் கழிவில்


162 b Mitcham road | London | sw 17 9NJ
Tel: 0208 767 3795 | 078 25 005 269

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சீட்டுத்திட்டத்தில் இணைந்து நீங்களும் ஓர் அதிஸ்டசாலி ஆகுங்கள்

அழகிய தங்க நகைகளுக்கு எம்மை நாடுகள்



வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை : 310



ஆரம்பம்: 1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

# பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும் தொடரும் சிங்கள மயமாக்கல் திட்டம்!

பொருளாதார நெருக்கடியால் இலங்கை ஸ்தம்பிதமடைந்திருக்கும் ஒரு பின்னணியில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குருந்தூர் பகுதியில் தமது சிங்கள மயமாக்கல் செயற்பாட்டடை அரசாங்கம் மீண்டும் முன்னெடுத்திருக்கின்றது. தென் பகுதியிலிருந்து இராணுவப் பாதுகாப்புடன் அழைத்துவரப்பட்ட நூற்றுக்கணக்கான பிக்குகள், சிங்கள மக்களின் முன்னிலையில் குருந்தூர் மலையில் அமைக்கப்பட்ட விகாரையில் புத்தர் சிலையை பிரதிஸ்டை செய்ய அவர்கள் எடுத்த முயற்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை (12-06-2022) தமிழ்த் தரப்பினரது போராட்டத்தினால் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால், இந்த முயற்சியை சிங்களவர்கள் மீண்டும் முன்னெடுக்கமாட்டார்கள் என்பதற்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லை.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குருந்தூர்மலை பிரச்சினையில் நீதிமன்றத்தீர்ப்பு, தொல்பொருள் திணைக்களத்தின் நடைமுறைகள் என்பன உள்ளபோதிலும் அவற்றைக் கவனத்திற்கொள்ளாமல் இந்த செயற்பாட்டடை சிங்கள தரப்பினர் முன்னெடுத்திருக்கின்றார்கள். இதற்கு முற்றுமுழுதாக அரச அனுசரணை இருந்துள்ளது. இந்த மலையில் உள்ள 'குருந்தாவசோக' ராஜமகா விகாரையில் புத்தர் சிலை மற்றும் புனித பொருட்கள் பிரதிஸ்டை செய்வதற்காக பாரியளவிலான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. நீதிமன்ற உத்தரவையும் மீறி இங்கு விகாரை ஒன்று அரசாங்கத்தின் ஆதரவுடன், இராணுவப் பாதுகாப்புடன் அமைக்கப்பட்டுள்ள நிலையில், அதன் அடுத்த கட்டமாகத்தான் இங்கு புத்தர் சிலையை பிரதிஸ்டை செய்வதற்கான முயற்சி முன்னெடுக்கப்பட்டது.

நாடு பாரிய பொருளாதார - அரசியல் நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நிலையில் தொல்பொருள் திணைக்களத்தின் அனுசரணையுடன் - பௌத்த மகாசங்கத்தின் ஆதரவுடன் - இராணுவப் பாதுகாப்புடன் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு ராஜமகா விகாரையின் விகாராதிபதி கல்கமுவே சந்தபோதி தேரர் பகிரங்கமாக அழைப்பு விடுத்திருந்தார் என்பதும் கவனிக்கத்தக்கது.

புதிய கட்டுமானப்பணிகள் எதுவும் இப்பகுதியில் இடம்பெறக்கூடாது என நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கும் நிலையில் அதனையிட்டு எந்தவிதத்திலும் அக்கறை செலுத்தாமல் இவ்வாறு பகிரங்கமாக அழைப்பு விடுக்கும் நிலையில் விகாராதிபதி இருந்துள்ளார். ஆனால், சட்டத்தையும் அமைதியையும் பாதுகாப்பதற்குப் பொறுப்பாக இருக்க வேண்டிய பொலிஸாரோ அவர்களுடைய இந்த சட்டவிரோத செயற்பாட்டுக்குத்தான் பாதுகாப்பு கொடுத்தார்கள். தமிழர்கள் அப்பகுதிக்குச் செல்வதைத் தடுத்தார்கள். இந்தத் தடையையும் மீறிச்சென்றுதான் தமிழ் மக்கள் அப்பகுதிக்குச் சென்று போராட்டத்தை முன்னெடுத்து இந்த முயற்சியைத் தடுத்து நிறுத்தினார்கள்.

குருந்தூர் மலையின் உச்சியில் ஆதிசிவன் கோவில் ஒன்று உள்ளது. இங்கு காலங்காலமாக முன்னெடுக்கப்பட்டுவந்த பொங்கல் உள்ளிட்ட பூசை வழிபாடுகள் சிங்களவர்களின் அடாவடித்தனத்தால் நிறுத்தப் பட்டுள்ளன. இங்கிருந்த சூலம் பிடுங்கி எறியப்பட்டுள்ளது. சூலம் இருந்த பகுதியில்தான் பௌத்த விகாரைக்கான கட்டுமானப்பணிகள் இடம்பெற்றன. அதன் அடுத்த கட்டமாகத்தான் புத்தர் சிலையை பிரதிஸ்டை செய்வதற்கான முயற்சிகள் இப்போது முன்னெடுக்கப்பட்டன.

2018 இல் இங்கு உருவான சர்ச்சையையடுத்து குருந்தூர் மலைப்பகுதி தொல்பொருள் ஆய்வுப் பகுதியாகப் பிரகடனம் செய்யப்பட்டது. தொல்பொருள் ஆய்வுப் பகுதியாகப் பிரகடனம் செய்யப்படும் ஒரு பகுதியில் புதிய கட்டுமானங்கள் எதுவும் செய்யப்படக்கூடாது என்பது தொல்பொருள் திணைக்களத்தின் பொதுவான விதி. அது எவ்வாறு உள்ளதோ அவ்வாறே பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு மேலாக நிதிமன்றத் தீர்ப்பு ஒன்றும் இதனைத்தான் வலியுறுத்தியிருந்தது. தொல்பொருள் ஆய்வுப் பகுதி என்ற பெயரில் இந்தப் பகுதி வெளியாட்கள் யாரும் செல்லமுடியாமல் தடுக்கப்பட்டது. இதற்காக இராணுவப் பாதுகாப்பு போடப்பட்டது. இதற்கு மத்தியில் தான் அங்கு விகாரை அமைக்கும் பணி





இலங்கையிலிருந்து
ஆர்.பாரதி

இடம்பெற்றிருந்தது. இங்கு இடம்பெற்ற தொல்பொருள் ஆய்வுகளின் போது பௌத்த சின்னங்கள் சில கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அரைகுறையாக சிதைவடந்த நிலையில் பௌத்த விகாரை ஒன்றும் அங்கு காணப்பட்டதாக தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் தகவல் வெளியிட்டார்கள். அதன் அடிப்படையில் தான் பின்னர் புதிதாக பௌத்த விகாரையை அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டது. படையினரின் பங்கேற்புடன்தான் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது. இவ்வாறு பௌத்த ஆலயம் கட்டப்பட்டமை ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதா என யாழ். பல்கலைக்கழக தொல்லியல்

15 ஆம் பக்கம் பார்க்க...



Deutsche Bank

# Willkommen in Ihrer Filiale Duisburg.



Janagran Mahendran
Berater Private Banking

Als Kunde erwarten Sie heute nicht nur erstklassige Finanzlösungen, sondern eine faire und verständliche Beratung. Wir wollen Ihren Ansprüchen gerecht werden – und haben uns zum Ziel gesetzt, Sie als verlässlicher und leistungsstarker Partner auf Ihrem privaten und geschäftlichen Weg zu begleiten. Dafür verbinden wir die Reichweite, Erfahrung und Leistungsstärke eines global führenden Finanzdienstleisters mit der Zuverlässigkeit und Kundennähe einer Hausbank. Sprechen Sie jetzt mit uns.

Filiale Duisburg
Königstraße 7–11, 47051 Duisburg
Telefon (0203) 9922-521
janagran.mahendran@db.com

| | |
|---|---|
| Nettodarlehensbetrag | 1.000 EUR |
| Effektiver Jahreszins* | 1,75 % |
| Fester Sollzinssatz p. a. | 1,74 % |
| Monatliche Rate | 84,12 EUR |
| Laufzeit in Monaten/Anzahl Raten | 12 |
| Zu zahlender Gesamtbetrag | 1.009,43 EUR |

Das Angebot entspricht dem repräsentativen Beispiel gemäß § 6a Absatz 4 PAngV.




*Gilt für einen Kreditbetrag von 1.000 bis 50.000 Euro bei 12 Monatsraten (gilt nur für Kunden ohne bestehenden Deutsche Bank PrivatKredit). Diese Kondition erhalten mindestens 2/3 der Kunden bei Abschluss eines Deutsche Bank PrivatKredits. Laufzeit in Abhängigkeit vom Ratenzahlungsbeginn: 12 bis 16 Monate. Das Angebot ist gültig bis 31. März 2021. Bonität vorausgesetzt.

Darlehensgeber: Deutsche Bank AG, Theodor-Heuss-Allee 72, 60486 Frankfurt am Main







# இங்கிலாந்து அரச சட்டப்பேரவையில் ஆணாதிக்கமா?

பெண்குழந்தைகள் சுமார் 12 வயதில் பருவமடைவதுபோல, சிறுவர்களுக்கும் அதே வயது எல்லையில் பருவ விழிப்புணர்ச்சி ஏற்படுகிறது. பெண்களின் அரைநிர்வாண புகைப்படம் ஏதும் கிடைத்தால், அதை பாடசாலைக்கு மறைத்துக் கொண்டுபோய் தன் சக மாணவர்களிடம் காட்டி பெருமைப்படுவது அந்தக்கால வழக்கம். அந்த சகாக்களில் பலர் சிரிப்பதோடு நிறுத்திக்கொள்வார்கள். சிலர் 'சாமிப்போக்கானவர்கள்'. காயமே இது பொய்யடா என்று நிராகரிப்பார்கள். எஞ்சியவர்கள் நாக்கைத் தொங்கப்போட்டபடி பார்த்துக்கொண்டே இருப்பார்கள். ஓரிருவர் "இது விரசம், அது இது" என்று கருதி பள்ளி வாத்தியாரிடம் போட்டுக் கொடுப்பார்கள்.

இது ஒரு சாதாரண பள்ளிக்கூடத்தில் நடக்கக்கூடிய காட்சி. ஆனால், 'உலக ஜனநாயகத்தின் தாய்' என்றும், உலக நாடாளுமன்றங்களின் 'தாய் நாடாளுமன்றம்' என்றும் உயர்வாக மதிக்கப்படும் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில், இந்த ஆங்கில நாட்டின் அரச சட்டப்பேரவையில் இப்படி ஒரு சம்பவம் மே மாதம் முதல் வாரத்தில் நடந்தது. இங்கிலாந் தின் னுநஎழட மாவட்டத்தில் Tiverton & Honiton என்று ஒரு தேர்தல் தொகுதி! கடந்த 12ஆண்டுகளாக 2010 முதல் M.Pயாக இருந்து வருகிறார் 66 வயதான நீல் பரிஷ். பிரதமர் Boris Johnson இன் ஆளும் கன்சவேடிவ் கட்சியை சேர்ந்தவர். திருமணமானவர். இரண்டு குழந்தைகளும் இருக்கின்றனர்.



மற்ற நாடுகளின் சட்ட சபைகள் போல் அல்லாது மேஜைகளே இல்லாத பிரிட்டிஷ் நாடாளுமன்றம். படத்தில் பிரதமர் ஜான்ஸன் பேசுகிறார். எதிர்க்கட்சி முன் வரிசையில் காலுக்கு மேல் கால் போட்டபடி அஞ்செலா



விமல் சொக்கநாதன் (இங்கிலாந்து)

"எனது விவசாயத் தொழிலுக்கு தேவையான உழவு இயந்திரங்களை வாங்குவதற்காக என் கைத்தொலைபேசியில் அதன் முகவரியை தேடிக்கொண்டிருந்தேன். அப்போது அதே போல பெயர்கொண்ட ஒரு Website குறுக்கிட்டது. பாலியல் உறவுகளை மிக விரிவாகக் காட்டும் படங்கள் காணப்பட்டன. அக்கணமே நான் அதனை தவிர்த்து விட்டு வெளியேறினேன். நான் செய்த மிகமிகப் பெரிய குற்றம் இன்னோர் தடவை அந்த தவறான கணனி முகவரிக்கு நானாக சென்று படங்களை பார்வையிட்டேன். இரண்டாவதாக நான் பார்வையிடும்போது நாடாளுமன்ற சபையின் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. நான் செய்தது மிகப் பெரும் தவறு! என் வாழ்வில் எஞ்சிய காலம் முழுதுமே இந்த தவறுடன்தான் நான் சீவிக்கவேண்டியிருக்கும். பன்னிரண்டு வருடங்களாக M.Pஆக நான் கட்டிக்காத்த கண்ணியம் காற்றோடு கரைந்து மறைந்துவிட்டது. அந்த ஒரு வினாடி ஒரு சிறிய கணம் என் மனம் தன் சுயகட்டுப்பாடுகளை இழந்தது என்றுதான் சொல்வேன்!.

இந்தச் சம்பவத்தால் என் மனைவி, குழந்தைகள், என் தொகுதி மக்கள், என் தேர்தல் தொகுதி சங்கத்தினர் அனைவருக்கும் நான் மாறாத களங்கத்தை ஏற்படுத்திவிட்டேன்" என்று கண்ணீர் மல்க திரு. நீல் பரிஷ் தமது பதவியை துறந்து நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டார். ஆளும் கன்சவேடிவ் கட்சிக்காக தமது தேர்தல் தொகுதியில் 60சத விகிதமான வாக்காளர்களின் ஆதரவைப் பெற்று 24,239பெரும்பான்மை வாக்குபலத்துடன் தொழிற்கட்சி வேட்பாளரை தோற்கடித்து பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் செல்வாக்குமிக்க உறுப்பினர்களில் ஒருவராகத் திகழ்ந்த நீல் பரிஷ் அவர்களுக்கு (எங்கள் ஊர் ஆச்சிக்கிழவியின் பாஷையில்) "ஏன்தான் புத்தி குறுக்கால போச்சுதோ தெரியேல்லை!" – சனி தோஷமாக இருக்கலாம்!.

இனி அவரது தொகுதியில் உப தேர்தல் ஒன்று நடத்தப்பட்டு ஆளும் கன்சவேடிவ் கட்சியின் புதிய உறுப்பினர் ஒருவர் M.Pஆக பதவிப்பிரமாணம் செய்வார். சுமுகமாக ஓடிக்கொண்டிருக்கும் ரயிலின் குறுக்கே நாயோ, வேறு விலங்கோ வந்தால் ரயில் ஒரு குலுக்கு குலுக்கிவிட்டு நிற்பதை நாம் உணர்ந்திருக்கிறோம்.

28 ஆம் பக்கம் பார்க்க...




Luckyfly
Lucky Fly Reisebüro
Srilanka tour
2022 Summer
Best Offers
இலங்கை சுற்றுலா வசதிகள்!
SriLankan
COLOMBO
e.mail: info@L-Fly.de | www.L-fly.de
சொகுசு வாகன
ஒழுங்குகள்!!
(Rental car)
யாவும் சிறப்பாகச்
செய்து தருகிறோம்
SriLankan
QATAR AIRWAYS القطرية
Emirates
طيران الخليج Gulf Air
Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171
Essener Str.26 44793 Bochum-Germany



# தமிழர்களின் பாரம்பரிய உணவும், மாற்றங்களும்!



பிரியா இராமநாதன்
(இலங்கை)

“உணவே மருந்து “என்கிற கலாசாரம் தமிழர்களினுடையது என்பதனை சங்ககால இலக்கியங்கள் தொட்டு நாம் அறிந்துகொள்ளலாம்.

சித்தர்களால் வழங்கப்பட்ட சித்த மருத்துவத்தில் கடைப்பிடிக்கப்பட்ட ஒரே ஒரு விடயம் என்னவென்றால், எது உனக்கு உணவாக இருக்கிறதோ அதுவே மருந்தாக இருக்க வேண்டும், எது உனக்கு மருந்தாக இருக்கிறதோ அதுவே உணவாக இருக்க வேண்டும் என்ற கொள்கை. சித்தர்கள் “பதார்த்தகுண சிந்தாமணி“ என்ற நூலை எழுதி அந்த நூலிலே நாம் சாப்பிடக்கூடிய தண்ணீருக்கு என்ன குணம்? பாலுக்கு என்ன குணம்? பருப்புக்கு என்ன குணம்? அதே போல அரிசிக்கு என்ன குணம்? அரிசியில் எத்தனை வகை இருக்கிறது? பாலில் எத்தனை வகை இருக்கிறது? வெள்ளாட்டுப் பாலுக்கு என்ன குணம்? பசும்பாலுக்கு என்ன குணம்? காராம்பசு பாலுக்கு என்ன குணம்? எருமைப்பாலுக்கு என்ன குணம்? என்று ஒவ்வொன்றையும் வகைப்படுத்தி முழுமையாக எழுதியிருக்கிறார்கள். அந்த உணவுப் பொருள்களுக்கான குணத்தை வகுத்து, ஒரு மனிதன் தன்னுடைய உடல் கூறுக்குத் தகுந்த எந்த உணவை எந்தப் பருவகாலத்தில் சாப்பிடவேண்டும்? என தமிழர்களுடைய பழங்கால வாழ்வியல் முறைகளில் எல்லாமே எழுதப்பட்டுள்ளது. தமிழர்கள் பழங்காலத்தில் பயன்படுத்திய உணவுகளில் சிறு தானியம் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். அதில் பிரதானமானது வரகு, திணை, குதிரைவாலி, சாமை. இதனைத் தொடர்ந்து சாப்பிட்ட தமிழர்களுக்கு எந்த நோய் நொடியும் இல்லாமல் நல்ல ஆரோக்கியமான சூழலில் வாழ்ந்ததை நாம் அறிந்துகொள்ளமுடிகின்றது . பண்டிகைகள் மற்றும் விசேட தினங்களில் மட்டுமே அரிசி சோற்றை சாப்பிட்டு வந்த தமிழ்ச் சமூகம் ஒன்று இருந்தது. அது காலப்போக்கில் அன்னியர் ஆதிக்கத்திற்குப் பிறகு, மேற்கத்தியக் கலாச்சார மோகம் வந்த பிறகு தினமும் அரிசிச் சோறு சாப்பிடக்கூடிய பழக்கம் தமிழ்நாட்டில் மட்டுமல்ல மற்றைய நாடுகளில் உள்ள தமிழ் மக்களிடமும் வேரூன்றியது .



முன்பு உலகத்துக்கே எடுத்துக்காட்டாக இருந்த தமிழ்ச் சமூகம் இன்றைக்கு உபயோகப்படுத்தக்கூடிய உணவுகள் என்ன? என்பதை பட்டியலிட்டுப் பார்த்தோமானால் மிகவும் வேதனை தரக்கூடிய விடயமாக இருக்கிறது. மருந்தே உணவு , உணவே நச்சு என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. அதற்கான காரணம் என்ன? ஏன் இந்த உணவு சார்ந்த விழிப்புணர்வு இல்லாத சூழல் உருவானது ?

அரிசியை தினசரி உணவாகவும், அரிசியை மூலப்பொருளாகக் கொண்ட இட்லி,(உண்மையில் இட்லி என்பது தமிழர்களின் உணவு அல்ல அது மலேசியாவில் இருந்து தமிழகத்திற்கு அறிமுகமான ஒன்று ) தோசையை தினசரி உணவாக தமிழர்கள் உற்கொள்ள ஆரம்பித்தபின் தமிழர்களுடைய உடல் கூறும் வெகுவாக மாற ஆரம்பித்தது. ஏனென்றால், நம் உணவிலே இரண்டு வகையான உணவு உண்டு, ஒன்று அமில உணவுகள் மற்றொன்று கார உணவுகள். எந்த உணவில் மாவுப்போருள்கள் மிக அதிகமாக இருக்கிறதோ அவை எல்லாம் அமில உணவுகள். நார்ச்சத்து, புரதம் அதிகமாக இருக்கக் கூடிய உணவுப் பொருள்கள் எல்லாமே கார உணவுகள். அரிசி முழு நேர உணவாக இருக்கும் பொழுது தமிழர்களிடையே பரவலாக இருக்கக் கூடிய கலாச்சாரம் என்னவென்றால், காலை வேலையில் இட்லி, தோசை, பிட்டு, ரொட்டி. பகலில் சோறு , இரவிலும் ஏதோவொரு மாப்பொருளினாலான உணவு . ஆக இதனுடன் இருக்கக் கூடிய காய்கறிகள் என்ன என்று பார்க்கும் பொழுது உருளைக்கிழங்கு, கத்திரிக்காய் போன்றவற்றைச் சேர்க்கிறோம். அடுத்து வெண்டைக்காய், முருங்கைக்காய். இதற்கு மேல் எந்த காய்கறிக்குள்ளேயும் போவதில்லை.

இன்றைய உணவுப் பழக்கத்தில் சராசரியாக 10 காய்கறிகள், முழுமையாக அரிசி, கூடுதலாக வட இந்திய ஆதிக்கத்திலிருந்து வந்த சப்பாத்தி (கோதுமை உணவு) நாண், இதை மட்டுமே நாம் உபயோகப்படுத்துகிறோம். ஆனால் தமிழர்கள் பயன்படுத்திய சங்க காலத்தில் இருந்த வந்த உணவுப் பொருள்கள் கிட்டத்தட்ட 3000 வரையில் இருக்கிறது. இந்த மூவாயிரம் உணவுப் பொருள்களை தமிழர்கள் எவ்வாறு பயன்படுத்தினார்கள் என்பதற்கான

28 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# அன்று தமிழ் மக்களுக்கான அரசின் தடை அமுலாக்கத்தை நாம் எப்படி எல்லாம் எதிர்கோண்டு வாழ்ந்தோம்!

**மண்ணெண்ணை மோட்டச்சைக்கிள் modification காலத்தின் கண்டுபிடிப்பு!**

அண்ணை முடிய நேரமாகுமே போகோணும் "எண்டு சொல்ல இந்தப் போத்திலுக்க ஆறு பிளேன்ரீயும் கடிக்கிறதுக்கு ஏதாவதும் வாங்கித்தாரும் எண்டு கேட்டார் தம்பிஅண்ணை. தம்பிப்பிள்ளை தம்பியாகி வயது முதிர்ச்சிக்கு அண்ணன் சேர வந்த பேர் தம்பியண்ணை. கடைசீல கணக்கில கழிக்கலாம் எண்டு காசைக் கேக்காம வேலை முடிஞ்சாச் சரி எண்டு ஓடிப்போய் கேட்டதுகளை வாங்கிக் கொண்டு வந்தன்.

பிளேன்டீயை குடுச்சிக்கொண்டு வாயும் மோட்டச்சைக்கிளும் போட்டி போட்டுக் கொண்டு புகை கக்க நட்டுக்களை திருப்பி வரநெ பண்ணீட்டு,"இப்ப ஓடும், பிறகு ஒருக்கா ஆனந்தன்டைக் கொண்டு போய் carburetor ஐ செய்வம் " எண்டு சொல்லி மோட்டச்சைக்கிளைத் தந்தார். மூண்டு நாளா அலைஞ்சதுக்கு ஒரு மாதிரி முக்கித்தக்கி ஓடிற நிலமைக்கு டிமைந வந்திட்டுது. எவ்வளவு கணக்கெண்டு கேக்கப் பதில் சொல்லமால் பத்தின பீடீ வாயில இருந்து எடுத்து மதிலில வைச்சார். எனக்கென்னவோ அந்தாளின்டை வாயில இருந்ததிலும் பாக்க பீடி சிவர்க்கரையில இருந்து புகைக்கிறது தான் கூட மாதிரி இருந்திச்சுது. எவ்வளவு எண்டு கேட்டா



கணக்கு நேர சொல்ல மாட்டார், பாத்து தாரும் எண்டு போட்டு என்னைக் கணக்கெடுக்காம அடுத்த சைக்கிளை பிரிக்கத் தொடங்கீடுவார்.

அம்மான்டை recommendation இல அண்ணா கம்பஸ்ஸ/க்குப் போகத் தொடங்க அப்பா ஆராரிட்டையோ எல்லாம் கேட்டு கடைசீல இந்த மோட்டச்சைக்கிளை கண்டு பிடிச்சார். பெடியள் கண்டா பறிச்சிடுவாங்கள் எண்டு வீட்டுக்காரர் இரவு தான் கொண்டு போகத் தந்தார். பின்னுக்கு வந்த சைக்கிள் காரர் foot rest இல காலை வைச்சுத் தள்ள ஒரு மாதிரி பலன்ஸ் பண்ணி இரவோட இரவா நிலவு வெளிச்சத்தில எங்கடை வீட்டின் முதலாவது



Dr.T. கோபிசங்கர்
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

வாகனத்தின் கன்னிப் பயணம் தொடங்கியது. ஆனாலும் வீட்டை கொண்டு வராமல் நேர கொண்டு போய் கராஜ்ஜில விட்டிட்டு வந்தம்.

அண்ணாக்கு எண்டு தான் வாங்கினது ஆனாலும் உள் வீட்டு ragging மாதிரி நான் தான் maintenance. இதைப் பண்ணினாத்தான் எப்பவாவது ஓடக் கிடைக்கும் எண்ட நம்பிக்கையில் நானும் கராஜ்ஜ/க்குப் போனான்.

அப்ப ஊரில பெரும்பாலான தொழில் செய்யிறாக்கள் இந்த வேலைக்கு விலை இவ்வளவு தான் எண்டு காசுக் கணக்கு கேக்கிறேல்லை. வாயைத்திறந்து நேர சொல்லவும் மாட்டினம் கேட்டாப் பாத்துத் தாங்கோ எண்டு தான் பதில் வரும். நானும் தம்பி அண்ணையை திருப்பித் திருப்பிக் கேக்க, அண்டைக்கு இப்பிடித்தான் ஒரு சைக்கிள் செய்தானான் அவர் ஐந்நூறு தந்தவர் நீர் படிக்கிற பெடியன் தானே எண்டு அவர் இழுக்க நான் வாங்கின ரீ கணக்கை நெச்சபடி முன்னூறை குடுக்க,பாத்திட்டு சரி "அடுத்தமுறை பாத்து எடுப்பம்" எண்டு சொன்னார்.

அம்மாவுக்கு கராஜ் வழிய போய் தூங்கிறது விருப்பமில்லை, அங்க போனா கெட்டுப் போடுவன் எண்டு ஆனாலும் வழியில்லாமல் போக விடுவா. அங்க குந்திக்கொண்டு இருக்கேக்க பத்தும் பலதும் தெரிய வரும். சில கதைகள் தொடங்கேக்க கண்காட்டுப்பட இடம் பொருள் ஏவல் அறிந்து கதைகள் நிப்பாட்டுப்படும்.

காலத்தின் தேவையில் சந்திக்கு சந்தி ஒரு சைக்கிள் கடை மாதிரி மோட்டச் சைக்கிகள் கராஜம் வரத் தொடங்கீட்டு. கராஜ்காரருக்கு மோட்டச்சைக்கிளோட ஆரும் வாறது டியமெ இல போடற நிரந்தர வைப்பு மாதிரித் தான். அதோட நாங்களும் சைக்கிளைப் பத்தி ஒண்டும் தெரியாமல் போய் ஒரு மாதத்தில எந்த நட்டுக்கு எத்தினையாம் நம்பர் சாவி எண்டு தெரியிற அளவுக்கு வளந்திடலாம்.


அப்ப வாகனம் ஓட லைசென்ஸ் எல்லாம் தேவேல்லை. ஆனால் கொஞ்சம் மெக்கானிக் வேலை

24 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

Dr.IN



# பக்கவாதம் யாருக்கு வரும்? காரணம் என்ன?


பக்கவாதம் ஏற்படுவது எமது மூளையின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு குருதி செல்லாமல் தடைப்படுவதால் ஆகும். குருதி செல்லாவிட்டால் முளையின் அந்தப் பகுதியில் உள்ள கலங்கள் இறக்க நேரிடும். கலங்கள் இறந்தால் முளையின் அந்தப் பகுதி எதைஎதையெல்லாம் இயங்க வைக்கிறதோ அவை செயலற்றுவிடும்.

உதாரணமாக உடலின் வலது பக்கத்தை இயங்க வைக்கும் கலங்கள் இறந்தால் பாதிக்கப்பட்டவரின் வலது பக்க கைகால்கள் இயங்காது. மாறாக பேச்சுத் திறனுக்கான பகுதிக்கான இரத்த ஓட்டம் தடைப்படால் பேச முடியாமல் போய்விடும். எங்கு பாதிப்பு ஏற்படுகிறது என்பதுடன் முளையின் எவ்வளவு இடம் பாதிக்கப்படுகிறது என்பதும் முக்கியமாகும்.

மிகச் சிறிய இடம் மட்டும் பாதிப்புற்றிருந்தால் கை கால் இயக்கமின்மை தற்காலிமாக இருந்து குணமாகிவிடலாம்.

மாறாக பாதிப்புற்றது பெரிய பகுதியானால் ஒரு பக்கம் இயங்காமலே போய்விடலாம். அதே போல பேச்சுக்காக பகுதியானால், பாதிக்கப்பட்ட முளையின் அளவுக்கு ஏற்ப அவ்வாறே சில நாட்களில் திரும்பக்கூடும்அல்லது முழுமையாகபாதிப்படையவும் கூடும்.

மூளையின் கலங்களுக்கு குருதி கிடைக்காமல் விடுவது இருவகை காரணங்களாலாகும். முதலாவதும் அதிகமானதும் குருதிக் குழாய்கள் (நாடிகள்) கொழுப்பினால் அடைபடுவதாலாகும். இரத்தத்தில் கொலஸ்டரோலின் அளவு அதிகரிக்கும் போது அவை நாடிகளின் உட்புறத்தில்



படிகின்னறன. தொடர்ந்து படியும் போது நாடிகளின் உட்புற அளவு குறைந்து குறைந்து வந்து இறுதியில் அடைத்துவிடும். அல்லது அவ்விடத்தில் இரத்தம் உறைந்து குருதி பாய்வதைத் தடுத்துவிடும்.

மூளையில் அவ்வாறு நடக்கும்போது பக்கவாதம் வருகிறது. இருதயத்தில் அவ்வாறு அடைத்தால் மாரடைப்பு வரும் என்பதையும் இங்கு சுட்டிக் காட்டலாம். இந்த வகை பக்கவாதமே மிக அதிகமானதாகும். 10 பேருக்கு பக்கவாதம் வந்தால் அதில் 8 பேருக்கு இவ்வாறு நாள அடைப்பினாலேயே ஏற்படுகிறது.

இரண்டாவது வகையில் சிறிய இரத்தக் குழாய் வெடித்து இரத்தம் வெளியேறுவதால் மூளையின் அந்தப் பகுதிக்கான குருதி ஓட்டம் தடைப்படுகிறது. இது மிகவும் ஆபத்தானது. ஆனால் இந்த வகை பக்கவாதம் குறைவானது.10 பேருக்கு பக்கவாதம் வந்தால் அதில் 8 பேருக்கு மட்டுமே இவ்வாறு குருதிக் கசிவினால் ஏற்படுகிறது.

எவருக்குமே பக்கவாதம் வரலாம் எனினும் சில வகை நோயாளிகளுக்கு அதற்கான சாத்தியம் அதிகம்.

மிக முக்கியமானது பிரஸர் என்று அழைக்கப்படும் உயர் இரத்த அழுத்தமாகும். பிரஸர் நோயுள்ள சிலர் "எனக்கு தலையிடி தலைச்சுத்து ஒண்டும் இல்லை தானே" என்று சொல்லி மருந்து சாப்பிடுவதை கைவிட்டுவிடுகிறார்கள். இது மிகவும் ஆபத்தானது. மருந்தைத் தொடர்ந்து சாப்பிட வேண்டும். ஒருவரின் பிரஸரின் அளவுக்கு ஏற்ப மருத்துவர் மருந்தின் அளவைத் தீர்மானிப்பார்.

அடுத்த முக்கிய காரணம் புகைத்தல் ஆகும். புகைத்தல் மட்டுமின்றி புகையிலை வெற்றிலை சப்புதலும் அவ்வாறே. புகையிலையில் உள்ள நிக்கரின் போன்ற இரசாயனங்கள் குருதிக் குழாய்களை சுருங்கச் செய்வதுடன் கழுத்தின் ஊடாக மூளைக்கு செல்லும் நாடிகளில் கொழுப்பு படிவுகளை ஏற்படுத்துவதாலும் பக்கவாதம் வருகிறது.

இதைத் தவிர,நீரிழிவு நோய்,இரத்தத்தில் அதிகரித்த கொலஸ்டரோல் பிரச்சனை, அதீத மது பாவனை,எண்ணெய் கொழுப்பு, உப்பு ஆகியவற்றை அதிகம் உட்கொள்ளும் தவறான உணவு முறை,போதிய உடலுழைப்பு அல்லது உடற்பயிற்சி அற்ற வாழ்க்கை முறை,அதீத எடை ஆகியவையும் பக்கவாதம் வருவதற்குரிய ஏனைய காரணங்களாகும். இளவயதை விட வயது முதிரும்போதும் பக்கவாதம் வரக் கூடிய வாய்ப்புகள் அதிகம் என்பதையும் குறிப்பிட்டே ஆக வேண்டும். அத்துடன் ஏற்கனவே ஒரு முறை பக்கவாதம் சிறிய அளவிலேனும் வந்து குணமாகியவர்களுக்கு மீண்டும் வரக் கூடிய சாத்தியம் அதிகம்.

எனவே எண்ணெய் உப்பு கொழுப்பு இனிப்பு போன்றவற்றைக் குறைத்து, அதிகளவு காய்கறிகளையும் பழவகைகளையும் மீன்



ஆகியவற்றை உண்ணும் ஆரோக்கியமான உணவு முறையைக் கடைப்பிடிப்பதுடன் தினசரி உடற்பயிற்சி செய்து அளவான உடம்புடன் ஆரோக்கியமாக வாழ்ந்தால் பக்கவாதம் மட்டுமல்ல ஏனைய பல நோய்களிலிருந்தும் எம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும்.



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# நெருக்கடிக் காதல்

ஏதோ ஒரு
வேலையாகப் போனவர்கள்
இடையில் வந்துகொண்டிருந்த
பெற்றோல் பவுஸரைக் கண்டுவிட்டு
போன வேலையை மறந்து
பெற்றோல் பவுஸருக்கு
பின்னால் ஓடிவருவதைப்போல
உன்னைக் கண்டதும்
எல்லாவற்றையும் மறந்து
உன்பின்னாலேயே ஓடிவருகின்றன
என் நினைவுகள்.

அந்த தாங்கிக்குள்
நிறைய பெற்றோலையே
நிரப்பிக்கொண்டுவருவதாய்
நம்புகிற
வாடிக்கையாளனை மாதிரி
நீயும் உன் மனதுமுழுதும்
என்னையே நிரப்பிக்கொண்டு திரிவதாய்
நப்பாசை எனக்கு.

பெற்றோலுக்காக
பொழுது புலரும்போதிருந்தே
காத்திருப்போரின் வரிசைகளுக்குள்
இடையே புகுந்துகொள்ளும்
இதயமே இல்லாத
கல்நெஞ்சக்காரர்களைப்போல
உனக்கும் எனக்குமிடையில்
எவரும் புகுந்துவிடக்கூடாதென்பதில்
எப்போதும்
கவனத்தோடு இருந்து கொள்கிறேன்.

என்றாலும்கூட
இரவு ஒருமணியளவில்
படி வாகனத்தில் வந்து
பதினைந்து இருபது மஞ்சள் பெரல்களில்
கள்ளத்தனமாக
டீசலை நிரப்பிக்கொண்டுபோகும்
ஈனத்தனம் போல
இரவோடிரவாக
உன்னைக் கடத்திக்கொண்டுபோய்
ஊரறியாமல் மணம்புரியும்
எச்சைத்தனம்
என்னிடத்தில் எள்ளளவும் இல்லை.

இன்றைக்கு வரும்
நாளைக்கு வருமென்று
எரிவாயுச் சிலிண்டருக்குக் காத்திருக்கும்
இன்றைய குடும்பத்தலைவி மாதிரி
உன்வரவுக்காக
எப்போதும் சந்திக்கும்
அந்த மரத்தடியில்
இப்போதும் காத்துக்கொண்டிருக்கிறேன்.

வைத்துக்கொண்டே இல்லையென்று
திருப்பியனுப்பும்
உள்ளொன்று வைத்து
புறமொன்று பேசுகிற
பெற்றோல்செற் பெடியன் மாதிரி
என்னை ஏமாற்றமாட்டாய் எனும்
அசைக்கமுடியாத நம்பிக்கையில்
நாளையும் அந்த மரத்தடியில்
காத்திருப்பேன்.

ஏனெனில்
மண்ணெண்ணெய் கலக்காத
ஒக்ரெய்ன் 92
தூய பெற்றோலைப்போல
எமது காதலும்
கலப்பில்லாத
தூய்மையானதென
இற்றைவரை உறுதியாக நம்புவதால்.

**வடிவேலு வடிவழகையன்**
**(இலங்கை)**

# கவிதா ஞானவாருதி கோசல்யா சொர்ணலிங்கம் அவர்களின் கவிதையும் அவர் குரலும் எவரையும் ஈர்க்கும் தன்மையுடையது!



வெற்றிமணி யேர்மனியில் வழங்கிய வெற்றிநிலா முற்றம் 2003 நிகழ்வில் கவிதாஞானவாருதி அவர்கள் வெற்றிமணிகள் என்ற தலைப்பில் கவிதை மழை பொழிகிறார்.



2005 ஆண்டு யேர்மனியில் வெற்றிமணி வழங்கிய சிவத்தமிழ் விழாவில் கவிதா ஞானவாருதி.

கவிதா ஞானவாருதி கோசல்யா சொர்ணலிங்கம் அவர்கள் யேர்மனியில் காலமானார். (23.05.2022) அன்னார் வெற்றிமணியின் விழாக்கள் பலவற்றில் கலந்து சிறப்பித்தவர். அவரும் அவர் கணவர் அமரர் சொர்ணலிங்கம் அவர்களும் விழாக்களில் குறித்த நேரத்திற்கு வந்து, இறுதிவரை நின்று சிறப்பித்தவர்கள். கவிதையும், அவர்குரலும் எவரையும் ஈர்க்கும். அவர் குரலில் பாசம், தெரியும். அவர் கவிதை வாசிக்கும் போது உச்சம் தொடும். கவிதாஞானவாருதி கோசல்யா சொர்ணலிங்கம் ஆத்மா சாந்தியடைய வெற்றிமணி.பிரார்த்தனை செய்கின்றது.

**மு.க.சு.சிவகுமாரன்**
**பிரதம ஆசிரியர்: வெற்றிமணி,**
**சிவத்தமிழ். யேர்மனி, இங்கிலாந்து**



2015 ம் ஆண்டு பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களின் பவள விழாவினை வெற்றிமணி சிறப்பாகக் கொண்டாடிய வேளை.






# எனது நாடக அனுபவங்கள் 19

ஆனந்தராணி பாலேந்திரா (UK)

**1977** இனக்கலவரத்தைத் தொடர்ந்து கொழும்பில் இருந்து எனது பெற்றோர் சகோதரர்களுடன் நான் யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாகக் குடியேறிய பின்னர் எனது நாடகப் பணிகள் மேலும் மும்முரமாகின. முழு நேரமாக ஆசிரியத் தொழில் செய்துகொண்டு மேடை நாடகங்களிலும் இடைவிடாது நடித்துக்கொண்டிருந்தேன்.

நாடக மேடையேற்றங்களுக்காக மட்டுமல்லொ சிலவேளைகளில் சில ஒத்திகைகளுக்காகவும் நான் கொழும்பு செல்லவேண்டி ஏற்படுவதுண்டு. ஆனால் ஒரு முழு நீள நாடகத்திற்கு எல்லா ஒத்திகைகளுக்கும் நான் கொழும்பு சென்ற ஒரு நாடகம் என்றால் அது 'முகமில்லாத மனிதர்கள்' நாடகம்தான். 1980இல் க.பாலேந்திராவினால் தயாரிக்கப்பட்டு நெறியாள்கை செய்யப்பட்ட நாடகம் இது. பாலேந்திரா உட்பட மற்றைய நடிகர்கள் கொழும்பில் தொழில் புரிந்துகொண்டும் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டுமிருந்தார்கள்.

வாரத்தில் ஐந்து நாட்களும் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றிவிட்டு வெள்ளிக்கிழமை இரவு பஸ் அல்லது ரெயினில் தனியாக கொழும்பு சென்று ஒத்திகைகள் பார்த்துப் பின்னர் ஞாயிறு இரவிரவாகப் பயணம் செய்து திங்கள் அதிகாலை யாழ்ப்பாணம் திரும்பி அன்று காலையே பாடசாலைக்குப் படிப்பிக்கப் போய் வந்திருக்கிறேன். இப்போது நினைத்துப் பார்க்கும்போது எனக்கே பிரமிப்பாக இருக்கிறது.

அப்போது நான் ஆசிரியராகப் பணியாற்றியது வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில். கனி;ட பாடசாலை அதிபராக இருந்தவர் மிஸ். எலாயஸ். என்னோடு மிகவும் அன்பாகப் பழகுவார். எனது நாடக ஈடுபாடுகள் அவருக்கு நன்கு தெரியும். நான் சனி ஞாயிறு தினங்களிலும் பிஸியான ஒருவர் என்பதும் அவருக்குத் தெரியும்.

எப்போதும் என்னை ஊக்குவித்த ஒருவர். நான் முதன்முதல் ஞாயிறு இரவு முழுவதும் பயணித்து திங்கள் காலை 8 மணிக்கு பாடசாலைக்கு வந்திருந்ததை அறிந்த அவர் திங்கட் கிழமைகளில் நான் ஒரு 11 மணியள



## முகமில்லாத மனிதர்கள் நாடகம்- 1980

முகமில்லாத மனிதர்கள் நாடகத்தில் எழுத்தாளராக மா. சத்தியமூர்த்தி மானசியாக ஆனந்தராணி பாலேந்திரா- 1996 லண்டன்

வில் வகுப்பு எடுக்கும் விதமாக எனது பாட அட்டவணை நேரத்தில் சில மாற்றங்களைச் செய்து உதவினார். அப்போது யாழ்ப்பாணக்கல்லூரி அதிபராக இருந்த திரு. கதிர்காமர் அவர்களும் என்னுடைய நாடக ஈடுபாடுகளுக்கு ஒத்தாசையாக இருந்தார்.

பாலேந்திரா 'முகமில்லாத மனிதர்கள்' நாடகப் பிரதியை என்னிடம் தந்தபோது அதன் தலைப்பு என்னை வெகுவாகக் கவர்ந்தது. நாடகம் பற்றிய பின்னணியைக் கேட்டேன். இந்தியாவின் தலைசிறந்த வங்காள நாடகாசிரியரான பாதல் சர்க்கார் எழுதிய 'ஏவம் இந்திரஜித்' என்ற நாடகத்தின் தமிழ் வடிவம் இது என்றார். 'முகமில்லாத மனிதர்கள்' என்ற தலைப்பை யார் வைத்தது என்று நான் கேட்டேன். தான்தான் வைத்தேன் என்றார். வழமைபோல இந்த நாடகாசிரியரைப் பற்றியும் நாடகத்தின் கரு கட்டமைப்புப் பற்றியும் அவர் எனக்கு விளங்கப்படுத்தினார். அப்போதுதான் இந்த நாடகம் நான் இதுவரை நடித்த நாடகங்களிலிருந்து வேறுபடப்போகின்றது என்பதை நான் அறிந்து கொண்டேன்.

'முகமில்லாத மனிதர்கள்' நாடகத்தில் நான் ஏற்று நடித்த பாத்திரத்தின் பெயர் மானசி. இந்த மானசி ஒரு இளம்பெண்ணாக வருவார் நண்பியாக வருவார் காதலியாக வருவார் இளம் மனைவியாக வருவார் தாயாக வருவார். இப்படி ஒருவரே பல பாத்திரங்களைத் தாங்கி நடிக்கின்ற வித்தியாசமான நாடகம். நான் நடித்த பாத்திரம் மட்டுமல்லொ ஏனைய பாத்திரங்களும்கூட இப்படித்தான். பொதுவாக பரதநாட்டியத்தில்தான் நடனக்கலைஞர் ஒருவரே இப்படிப் பல பாத்திரங்களாக மாறி அபிநயத்து ஆடுவார். அங்கு ஆடல் மட்டும்தான் இருக்கும். ஆனால் இங்கு நாங்கள் பாத்திரத்தின் தன்மைக்கேற்ப வசனங்களும் பேசவேண்டும். வித்தியாசமான ஒரு நாடகந்தான் இது.

இந்த நாடகத்தை எழுதிய பாதல் சர்க்காரைப்பற்றிக் கட்டாயம் கூற வேண்டும். 1935ஆம் ஆண்டு கல்கத்தாவில் பிறந்து கட்டடக் கலைஞராகப் பட்டம் பெற்று நகரத்திட்ட வடிவமைப்பாளராகக் கடமையாற்றிய வங்காள நாடகாசிரியர் பாதல் சர்க்கார் 25க்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதி மேடையேற்றியுள்ளார். இவர் வங்காளத்தில் தனது நாடகங்களை எழுதினாலும் ஆகக்கூடிய இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நாடகாசிரியராகப் புகழ்பெற்று விளங்கினார். இவர் சென்னை உட்பட இந்தியாவின் பல மாநிலங்களில் நாடகப் பயிற்சிப் பட்டறைகளை நிகழ்த்தியுள்ளார். 1967இல் உருவாக்கப்பட்ட இவரது 'சதாப்தி குழு' 1973 முதல் திறந்த வெளி நாடகங்களை நடத்தி வந்தது. அரசியல் அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தபோதும் தொடர்ந்து நாடகங்களை நடத்தி வந்தார். பாதல் சர்க்கார் 1962ஆம் ஆண்டு எழுதிய நாடகம் 'ஏபங் இந்திரஜித்'. இதன் தமிழ் வடிவம்தான் 'முகமில்லாத மனிதர்கள்' நாடகம்.

'முகமில்லாத மனிதர்கள்' நாடகத்தில் நாங்கள் ஏழு நடிகர்கள் பல்வேறு பாத்திரங்களைத் தாங்கி நடித்தோம். முதல் மேடையேற்றத்தின்போது என்னுடன் மெல்லிசைப் பாடகர் மா.சத்தியமூர்த்தி கானகலாதரன் சுப்ரமணியம் மகேந்திரன் பாஸ்கரன் நிர்மலா ஆகியோர் நடித்தார்கள். இதில் முக்கிய பாத்திரமேற்று நடித்த சத்தியமூர்த்தி கானகலாதரன் இருவரும் நடிப்புத்துறைக்குப் புதியவர்கள். மகேந்திரனும் அப்படியே.

மிகுதி அடுத்த இதழில்...





INNENSTADT WEST
தமிழர் அரங்கம்
Kulturbüro
Stadt Dortmund
Kulturbetriebe
DORTMUND
தமிழர் தெருவிழா
2022
Straßenfest der Tamilen
Dortmunder U
Park der Partnerstädte
Bundesstraße 54
westentor
Rheinische Str.
02.09.2022
FR. 16:00 - 00:00
03.09.2022
SA. 11:00 - 00:00
04.09.2022
So. 12:00 - 19:00
3 நாட்கள்
வெள்ளி - சனி - ஞாயிறு
Dortmunder U - Park der Partnerstädte
VMDO
Verbund der sozial-kulturellen Migrantenvereine in Dortmund e.V.
samo.fa
Integrationsagentur der Stadtteil-Schule Dortmund e.V.
தமிழர் கலையகம்
TKD
SIVANDIGITAL
SOUND & MORE
ortel MOBILE
ஊடக அனுசரணை
வெற்றிமணி
அகரம்
தமிழ் ரைம்ஸ்
TAMIL TIMES
IBC தமிழ்
Lankasri
ETR
0151633 633 33 | 0157 370 50 110 | 0179 26 30 317 | 0151 279 909 90







# நிறை ஓதம் நீர் நின்று!

கடை வானில் முயங்கும் பரிதியை தினம் தழுவும் நிரதி போல், என் எண்ணத்தழுவல்கள் எல்லாம் தினம் அல்ல கணமும் பாரதியிடம் சொக்கி நிற்கின்றன.

"தேமதுர தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"

தமிழின் சொல்வளமும், உவமை அழகும், எதுகையும் மோனையும் ரசமும் சுவையும் கொஞ்சி விளையாடும் லகர ழகரமும் , இதழொட்டும் நளினச் சொற்களும் கொண்டு காதலும் கனிவும் இனிமையும் இன்பமும் ததும்பும் நம் தமிழ் மதுரம் மதுரம் மதுரம்.

தமிழ் மழையில் முழுவதும் தோய்ந்து இயல் சுவை அறிந்த இசையில் ஊறித் திளைத்து நாட்டியத்தால் உய்வுற்றுப் பெறும் உவகையால் அபிநயக்ஷேத்திராவின் அண்மைக்கால ஆக்கங்கள் நெஞ்சள்ளும் மாமருந்தாய் எம்மை ஆரத் தழுவுகின்றன. அபிநயக்ஷேத்திராவின் அரங்கேற்ற நிகழ்வுகளில் கிடைக்கும் அனுபவமும், ஆய்வும், ஆனந்தமும் அதிகரித்துக் கொண்டே செல்வதையும் அவதானிக்க முடிகிறது.


ஆய்வும் நடன ஆக்கமும் கலாசூரி திவ்யா சுஜேன் (இயக்குனர்– அபிநயஷேத்ரா நடனப்பள்ளி)


இசையும் மார்க்க ஆக்கமும் 'ஞானபாநு' கலாநிதி ராஜ்குமார் பாரதி (மகாகவி சுப்பிரமணிய பாரதியின் கொள்ளுப் பெயரன்)

நாட்டிய சம்பிரதாய அரங்கேற்ற கச்சேரி மார்க்கத்தின் முக்கியத்துவத்தையும், மரபினையும், உன்னதத்தையும் நன்கு அறிவோம். புஷ்பஞ்சாலி முதலாக தில்லானா வரை நேர்த்தியாக அமைக்கப்பட்ட மார்க்க உருப்படிகளில் காலாகாலமாக மாற்றங்கள் ஏற்பட்டும் வருகின்றன.

"ஞால வெளியினிலே" என்ற பாரதி மார்க்கத்தை 2019 இல் அரங்கேற்றும் போது கிடைத்த வரவேற்பும், பாராட்டும், சான்றோர்கள் பலர் எழுதிய விமர்சன கட்டுரைகளும், இந்திய கலைஞர்கள் பலராலும் இன்று வரை பேசப்படும் மார்கமாக அமைந்ததும், அதுபோல மற்றுமொரு மரபு மாறாத புதிய மார்க்கத்தை அமைக்க உந்துதல் தந்தது.

அதன் விளைவால் வடிவுருவானது ஐம்பெருங் காப்பிய மார்க்கம்.

" நிறை ஓதம் நீர் நின்று "

முத்தமிழ் செறிந்த காப்பியமாக போற்றப்படும் சிலப்பதிகாரத்தினை மையப்படுத்தி பல்வேறான நாட்டிய ஆய்வுகளும், அரங்க நிகழ்வுகளும் தொடர்ந்து நடைபெற்று வருவது போற்றுதற்குரியது. புகப் புகப் பேரொளி காட்டவல்ல காப்பியங்களுள் தமிழ் தந்த பெரும் பரிசு ஐம்பெருங் காப்பியங்கள்.

**சிந்தா மணியாம்**
**சிலப்பதிகாரம் படைத்தான்**
**நந்தா மணிமே**
**கலைபுனைந்தான் – நந்தா**
**வளையா பதி தருவான்**
**வாசகனுக்கு ஈந்தான்**
**திளையாத**
**குண்டலகேசிக்கும்**

என கந்தப்ப தேசிகர் குறிப்பிட்டதற்கிணங்க சீவக சிந்தாமணி காலத்தால் முந்தியது என்ற கருத்துக்கும் வரலாம்.

**நிறை ஓதம் நீர்**
**நின்று நீள் தவமே**
**செய்யினும் வாழி**
**நீலம்**
**அறையோ அரிவை**
**வரி நெடுங்கண..**

என சீவக சிந்தாமணியில்,சீவகன், தன் மனைவியரில் ஒருத்தியான இலக்கணையைப் புகழ்ந்து வர்ணிக்கும் அற்புதமான வரிகள் எம் உள்ளத்தைக் கவர, உருப்பெற்ற ஐம்பெருங் காப்பிய மார்க்கத்திற்கு " நிறை ஓதம் நீர் நின்று என்று தலைப்பிட்டோம்.

ஆமாம். இந்தப் பெருங் காப்பியங்கள் ஓதம் தான், பெருங் கடல் தான். அதுவும் சாதாரண கடல் அல்ல நிறைவான கடல். " நிறை " என்ற ஒற்றை சொல் தரும் ஆழம் தமிழின் சிறப்பின் உச்சம்.

இக்கடலுக்கு முன் எம்மை நாம் ஒப்படைத்து நின்றால் போதும், இவ்வாழ்வின் வெளிச்சம் காட்டும், விசாலம் காட்டும், எல்லையற்ற பெரும் தன்மை காட்டும், ஆஹா அத்வைதம் காட்டும்.

மார்க்க உருப்படியின் ஆரம்ப நிகழ்வான புஷ்பாஞ்சலி தமிழ் வணக்கமாக அமையப்பெற்றது.

காப்பியங்கள் யாவுமே நாயகன்–நாயகி பாத்திரங்களோடு பிணைவதால் ஆணும்– பெண்ணுமாக இரு மாணவர்கள் இப்படிப்பினூடாக அரங்கேறுகிறார்கள். இருவர் இணைந்து ஆடல் வடிவம் தருவதால் துவி ராகம் துவி நடையில் அமைக்கப்பட்டுள்ளது.

அடுத்து சீவகன் கவுத்துவத்தினூடாக சீவக சிந்தாமணியின் சாரம் கவி வரிகளுக்குள் பொதித்து சொற் கட்டுகளின் சேர்க்கையுடன் வழங்கப்பட்டது. இது காந்தாமணி ராகத்தில் அமைந்தது.

மார்க்கத்தின் நடு நாயகமாக விளங்கும் வர்ணம் என்னும் உருப்படி நாடகத் தமிழின்



» 30 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



ARUN JESUTHASAN PRESENTS
KBS
Music
!! SUBMIT YOUR TAMIL MUSIC !!
MANAGEMENT@KBS-MUSIC.COM

# ஈழத்தில் நூற்றாண்டு கண்ட பல்கலைக்கழகத் தமிழாய்வு

ஈழநாட்டில் தமிழ்க்கல்வி பல்கலைக் கழகக் கல்வியாக மாற்றமுற்று ஒரு நூற்றாண்டாக ஆகிவிட்டது. பொன். அருணாசலம், ஜேம்ஸ் பீரிஸ், மார்க்கஸ் பெர்னாண்டோ போன்ற பெரியவர்கள் ஒன்று சேர்ந்து இலங்கையிலே ஒரு பல்கலைக் கழகம் அமையவேண்டுமென ஒரு சங்கம் அமைத்து முயற்சிகள் மேற்கொண்டனர். 1921ஆம் ஆண்டு கொழும்பிலே ஒரு பல்கலைக் கழகக் கல்லூரி அமைக்கப்பட்டது. அக்கல்லூரியின் பாடவிதானத்தில் தமிழ் ஒரு பாடமாக உள்வாங்கப்பட்டிருந்தது. இக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக சி.வை.தாமோதரம் பிள்ளையின் மகன் அழகசுந்தரதேசிகர் நியமிக்கப்பட்டார். அவர் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியதால் வண. பிரான்சிஸ் கின்ஸ்பரி என்னும் பெயருடையவர். அவ்வேளை க.கணபதிப்பிள்ளை அங்கு மாணவராகப் பயின்று பி.ஏ,பட்டம் பெற்றதுடன் புலமைப் பரிசிலும் பெற்று அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சென்று சுவாமி விபுலானந்தர், சோழவந்தான் ஆகியோரிடம் கற்று தமிழ் வித்துவான் பட்டம் பெற்று, பின்னர், இலண்டன் பல்கலைக் கழகத்துக்குச் சென்று மொழியியலில் பிஎச்.டி. பட்டம் பெற்று திரும்பினார். அப்பொழுது பல்கலைக் கழகக் கல்லூரி முழுமையான பல்கலைக் கழகமாயிற்று. கலாநிதி க. கணபதிப்பிள்ளை தமிழ்த் துறைக்கு வந்தார். கின்ஸ்பரி தேசிகர் தமிழ்ப் பற்றுடன் நல்ல ஆசிரியராகத் திகழ்ந்தார். கணபதிப்பிள்ளை மரபுவழித் தமிழ்ப் பயிற்சியும் நவீன மொழிப் பயிற்சியும் பெற்றவர். இவ்வேளை சுவாமி விபுலாந்தர் இலங்கைப் பல்கலைக் கழக முதல் தமிழ்ப் பேராசிரியராகத் தமிழ்த்துறைக்கு வந்தார். இரண்டு தமிழ்ப் புலமை பெற்ற தமிழ்த் துறவிகளும் கணபதிப்பிள்ளையும் தொடக்கிவைத்த தமிழ் ஆய்வு சிறந்து விளங்க பேராசிரியர்களான செல்வநாயகம், சு. வித்தியானந்தன், ஆ,சதாசிவம் ஆகியோரும் அவர்களைத் தொடர்ந்து ம.மு, உவைஸ், கா. சிவத்தம்பி, க. கைலாசபதி, ஆ, வேலுப்பிள்ளை, பொ. பூலோகசிங்கம், சி. தில்லைநாதன், அ. சண்முகதாஸ் ஆகியோர் தமிழ் ஆய்வின் வளர்ச்சியினை முன்னெடுத்தனர். இதே வேளை தமிழ்த்தூதர் வண. தனிநாயகம் அடிகளாரும் இலங்கைப் பல்கலைக் கழகக் கல்வியியல் துறையிலே ஆசிரியராக இருந்தமை குறிப்பிடத் தக்கது. இவர்கள் ஈழத்தின் தமிழாய்வினை உலகப் பெறவைத்தனர். பின்னரும் பல பேராசிரியர்கள் இப்பணியிலே சேர்ந்தனர். இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு இந்நாட்டின் கலைப்பீட மனிதப்பண்பியல் பீட நூற்றாண்டினை (1921-2021) அண்மையில் கொண்டாடியபோது தமிழ் ஆய்வின் நூற்றாண்டு பற்றிய கட்டுரை அடங்கிய ஒரு தொகுதியையும் வெளியிட்டது.

**கருகுமணி: 05**





தகைசால் பேராசிரியர்
**அ.சண்முகதாஸ்**
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பொருளாதார நெருக்கடியின் ......

துறைப் பேராசிரியர் பரமு புஸ்பரத்தினத்திடம் கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்:

'அநுராதபுரத்தில் 20 க்கும் மேற்பட்ட இந்து ஆலயங்களின் அழிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் சைவ ஆலயங்கள்இ திராவிட கலை மரபில் கட்டப்பட்டவை. அந்த ஆலயங்களின் அழிபாடுகள் தேசிய மரபுரிமைச் சின்னங்களாகக் கருத்திற்கொண்டு பார்க்கப்பட்டதே தவிரஇ அவை மீள அமைக்கப்பட்டு வழிபாட்டுக்குரிய ஆலயங்களாக அமைக்கப்படவில்லை. அவற்றில் ஒரு காளிகோவிலைத் தவிர ஏனையவை எங்கிருந்தன என்பது கூட அடையாளங்காண முடியாதளவுக்கு அதனுடைய நிலைமை காணப்படுகின்றது.

எனவே குருந்தலூரில் பௌத்த எச்சங்கள் காணப்படுமானால் அவற்றை கண்டறிந்து ஆய்வு செய்து பாதுகாத்து ஒரு மரபுரிமைச் சின்னமாகக்கொள்ள வேண்டுமே தவிர முன்னொருகாலத்தில் சிங்கள மக்கள் வாழ்ந்ததற்கான ஒரு சின்னமாகக் கருத்திற்கொண்டு அதனை மீளக்கட்டி ஒரு ஆலயமாக மாற்றுவது தொல்லியல் நடைமுறையின் சட்டங்களுக்கு முரணானதாகவே பார்க்கப்பட வேண்டும்.'

ஆக தொல்லியல் திணைக்களத்தின் நடைமுறைகளையும் மீறியே இந்தச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன என்பது வெளிப்படை. எதற்காக அரசாங்கமும், பௌத்த அமைப்புக்களும் இந்த வேளையில் இதனைச் செய்து ஏன்?

'அரசாங்கம் பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கின்றது. எரிபொருட்களுக்காக மக்கள் தினமும் வீதிகளில் போராடுகின்றார்கள். உணவுப் பொருட்களின் விலைகள் எட்டமுடியாத உயரத்துக்குச் சென்றுவிட்டதால் நாட்டில் 80 வீதமான மக்கள் ஒரு நேர உணவைத் தவிர்த்துக்கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் 'கோட்டா கோ கம'விலும் ஏனைய இடங்களிலும் தீவிரமடைந்திருக்கின்றன. இதில் தமிழர்களும் இணைய வேண்டும் என்ற கோரிக்கை உள்ளது. இதன் மூலமாக ஏற்படக்கூடிய இன ஒற்றுமையை குலைப்பதும், நாட்டில் என்னதான் நெருக்கடி இருந்தாலும் சிங்கள - பௌத்த மயமாக்கலில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது என்பதை சிங்கள - பௌத்த கடும் போக்காளர்களுக்குக் காட்டிக்கொள்வதும்தான் அரசின் நோக்கமாக இருந்திருக்க வேண்டும்' எனக் கூறுகின்றார் பேராசிரியர் புஸ்பரெட்ணம்.

அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கதான் இந்தப்பகுதிக்குச் சென்று இந்த பௌத்த விகாரை அமைக்கும் பணிகளுக்குப் பின்புலமாக இருந்தவர். 'தொல்பொருள் ஆய்வுப் பணிகளே இங்கு முன்னெடுக்கப்படும். ஆக்கிரமிப்பு அல்ல' என தமிழத் தரப்புக்கு சமாதானம் கூறியிருந்தார். ஆனால், இவ்வருட ஆரம்பத்திலிருந்து இராணுவத்தின் முழுமையான பாதுகாப்புடன் விகாரைக்கான கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

ஆய்வுப்பணிகளும் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவித்த தொல்பொருள் திணைக்களம் அனுராதபுர காலத்துக்குரிய சின்னங்கள் சில இங்கு கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவித்திருந்தது. இந்த ஆய்வுகளின் போது கண்டெடுக்கப்பட்ட சின்னங்கள் தொடர்பாகவோ அவற்றின் வரலாற்று விளக்கங்கள் தொடர்பாகவோ வெளிப்படைத் தன்மையாக எதுவும் நடைபெறவில்லை. தமக்கேற்றவகையிலான பெறுபேறுகளைத்தான் தொல்பொருள் திணைக்களம் வெளியிட்டது. இது தொடர்பில் முரண்பாடான கருத்துக்களை தமிழ் ஆய்வறிஞர்கள் சிலர் முன்வைத்த போதிலும் அவை கவனத்திற் கொள்ளப்படவில்லை.

இருந்தபோதிலும் வரலாற்றுத் தகவல்களின்படி 12 ஆம் நூற்றாண்டுப் பகுதியில் தமிழர்களும் பௌத்த மதத்தைப் பின்பற்றியிருக்கின்றார்கள். இதனை சிங்கள அறிஞர்கள் பலரும் முன்னர் ஏற்றிருந்தார்கள். ஆனால், இப்போது அவர்கள் அதனை மறைக்க மெுற்படுகின்றார்கள். பௌத்த சின்னங்கள் பலவற்றில் தமிழ் எழுத்துக்களும் காணப்பட்டுள்ளன. இது தமிழ் மக்கள் பௌத்தமதத்தை பின்பற்றினார்கள் என்பதற்கு ஆதாரம். ஆனால், வடக்கில் இருக்கக்கூடிய பௌத்த சின்னங்களை பயன்படுத்தி அந்தப் பகுதியை சிங்கள மயமாக்குவதை அரசும், தொல்பொருள் திணைக்களமும் தமது நிகழ்சித்திட்டமாக மாற்றியமைத்திருப்பதால் தமிழ் பௌத்தர்கள் இருந்தார்கள் என்பதை அவர்கள் மறைக்கின்றார்கள்.

சிங்கள - பாளி இலக்கியங்கள் சில இந்த குருந்தூர் மலை தொடர்பாக சில தகவல்களை வெளியிட்டிருப்பதாக தொல்பொருள் ஆய்வாளரான பேராசிரியர் புஸ்பரெட்ணம் தெரிவிக்கின்றார். '13 ஆம் நூற்றாண்டில் தமிழருக்கு சார்பான அரசு ஒன்று இருந்தது - இதன் படைகள் இராணுவ மையம் இருந்த இடங்களில் ஒன்றாக இந்த குருந்தலூர் பகுதியை சிங்கள பாளி இலக்கியங்கள் தெரிவிக்கின்றன' என பேராசிரியர் குறிப்பிடுகின்றார். '11 ஆம் நூற்றாண்டில் பராக்கிரமபாகுவின் பர்மியப் படையெடுப்புக்கு தலைமை தாங்கியதும் ஒரு தமிழன்தான். அவனுடைய தலைமையிலான படை குருந்தூர் பகுதியிலிருந்தே புறப்பட்டது என பேராசிரியர் பரணவிதாரண வரலாற்று நூல் ஒன்றில் தெரிவிக்கின்றார்' என பேராசிரியர் புஸ்பரெட்ணம் சுட்டிக்காட்டுகின்றார். இதனை விட தமிழ் மொழியிலான கல்வெட்டுக்கள் பலவும் இங்கு கண்டெடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

ஆக, ஆய்வுகள் என்ற பெயரில் தொல்பொருள் திணைக்களம் வெளிப்படைத்தன்மையில்லாமல் தமக்குத் தேவையான பெறுபேறுகளை உருவாக்குகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது. இதனை எந்தளவுக்குத்தான் தமிழ்த் தரப்பினர் வெளிப்படுத்தினாலும் சிங்களத் தரப்பினர் அதனை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. 'கோட்டா கோ கம'வில் நடைபெறும் போராட்டத்தில் தமிழர்களும் கலந்துகொள்ள வேண்டும் என அழைப்பு விடுக்கப்படுகின்றது. ஆனால், தமிழர்களின் மீது நிகழ்த்தப்படும் இவ்வாறான ஆக்கிரமிப்புக்கள் அவர்களின் கண்களில் படாத வரையில் தமிழ் மக்கள் அந்தப் போராட்டங்களில் எவ்வாறு இணைந்துகொள்ள முடியும்?







நடுப்பக்கம்

சேவியர்
(தமிழ்நாடு)

# காதல் என்பது எதுவரை?

காதலின் தொடக்கப் புள்ளி எதுவெனக் கேட்டால் ஒருவேளை சட்டென சொல்லி விடலாம். அது ஒரு மழைச்சாரலின் இடையே தெரிந்த காதலியின் மின்னல் முகமாகக் கவித்துவம் காட்டலாம். கூடவே நடந்த தோழி சட்டென பேசிய ஒற்றை வார்த்தையில் உள்ளுக்குள் இடைந்து தெறித்த கண்ணாடிக் கூடென கதைகள் பேசலாம். முகத்தைப் பார்த்திராத டிஜிடல் காதலியின் குறுஞ் செய்தி குறுகுறுக்க முளைத்து வந்ததென தொழில் நுட்பம் பேசலாம். எது எப்படியோ, காதலின் தொடக்கப் புள்ளியைக் கண்டுபிடிப்பதொன்றும் பிரம்மப் பிரயர்த்தனம் இல்லை !

ஆனால் அதன் முடிவுப் புள்ளியை எப்படிக் கண்டுபிடிப்பது. வட்டத்தை வரைந்து விட்டு அதன் மூலைகளைக் கண்டுபிடிக்கச் சொல்வது போல சிக்கலானது அது. கைப்பிடி அளவுக் காற்றை எடுத்து கடித்துத் தின்பது போல இயலாத காரியம் அது.

பெய்து ஓய்ந்த பெருமழையின் கடைசித் துளி எங்கே விழுந்ததென எப்படிக் கண்டுபிடிப்பது ? பிரபஞ்சத்தின் முதல் ஆழியின் கடைசி அலை எப்போது அடிக்குமென எப்படிக் கணக்கிடுவது ? கடைசியாய் எப்போது என் நாசிக்குள் பிராணவாயு படுத்துப் புரளுமென எப்படி உறுதி செய்வது ? நீள்வட்டப் பாதையில் ஓடிக்கொண்டிருக்கும் விளையாட்டு ரயிலின் கடைசிப் புள்ளி எதுவென எப்படித் தெரியும் ? காதலின் கடைசியும் அப்படியே! அது எதுவரை என்பதைக் கணக்கிடுவது கடினம்.

காதலின் கடைசியை நமது வாழ்க்கையின் கடைசிக் கணம் வரை, என முடிவு செய்யலாமா ? அல்லது நம் வாழ்க்கையின் கடைசிக் கணத்தை காதலின் கடைசிக் கணம் வரை, என முடிவு செய்யலாமா ? காற்று உள்ளவரைக்குமா, அந்த தொடுவானத்தின் எல்லை தரையில் தொடும் வரைக்குமா, பூமியின் ஓட்டம் நிற்கும் வரைக்குமா? அல்லது அந்த வானத்தின் நீலம் உள்ளவரைக்குமா ? இவையெல்லாம் கவிதைகளில் உவமைகளாய் ஒளிந்திருக்கத் தான் லாயக்கு !

## எனில், காதல் என்பது எதுவரை ?

அன்பெனும் அகல் விளக்கு இதயத்துக்குள் இடைவிடாமல் எரிந்து கொண்டிருக்கும் வரை !, அதில் பாசத்தின் எண்ணையும், தியாகத்தின் திரியும் எரிந்து கொண்டிருக்கும் வரை ! அன்பினை அகற்றிவிட்டுப் பார்த்தால் காதலின் திரைச்சீலைகள் கிழிந்து தொங்கும் ! அழகை இழக்கும்.

ஒருவர் குறையை ஒருவர் தாங்கும் வரை ! ஒருவர் நிறையை ஒருவர் ஏந்தும் வரை ! இட்டு நிரப்புதலும், விட்டுக் கொடுத்தலும் காதல் வாழ்க்கையின் ஆனந்த தருணங்கள். முழுமை என்பது எங்கும் இல்லை என்பதை மனதால் புரிந்து கொள்ளும் வரை காதல் வாழும். குறைகள் என்பது அழகியலின் அம்சம் என்பது நிலைக்கும் வரை காதல் நீடிக்கும்.

காமத்தின் மெல்லிய சாரல் காதலுக்குள் பெய்யும் வரை ! காதலின் அடைமழை காமத்துக்குள் கலந்திருக்கும் வரை காதல் வாழும். மோகத்தின் வரிகள் மட்டுமே கவிதை முழுதும் உடல் வாசனை வீசிக் கிடந்தால் காதல் வீழும். மோகத்தின் மெல்லிய காற்று, காதலின் தோட்டத்தில் வீசலாம் ஆனால் மோகத்தின் புயல் மட்டுமே காதலின் தோட்டத்தில் அடித்துக் கொண்டிருக்கக் கூடாது.



சுயநலத்தின் சுருக்குப் பைகளில் அடுத்தவர் ரசனையை முடிந்து விடாமலிருக்கும் வரை! காதலுக்கு சுயநலம் இல்லை, சுயநலம் இருந்தால் அது காதலல்லை. அடுத்தவர் சுதந்திரத்தின் சிறகுகளை நறுக்கி காதலுக்கான கை விசிறியைச் செய்ய முடியாது. அப்படிச் செய்தால் காதல் நிலைப்பதில்லை.

இருவரின் உறவில் பாதுகாப்பின் பரிசுத்தம் பரவிக் கிடந்தால் காதல் வாழும். பயத்தின் ஆக்டோபஸ் கரங்கள் ஆங்காங்கே விரவிக் கிடந்தால் காதல் வீழும். பயம், காதலின் எதிரி. வெளிப்படையாய் இருக்கின்ற காதலில், ரகசிய பயங்கள் எழுவதில்லை. ரகசிய பயங்கள் முளைக்கும் இடங்களில் காதல் வெளிப்படையாய் இருப்பதில்லை. காதல் வெறும் உணர்வுகளின் பிள்ளையல்ல. அது செயல்களின் தாய். உணர்வுகள் நெருக்கமாக்கும், செயல்கள் அந்த நெருக்கத்தை இறுக்கமாக்கும். காதலைக் காதலுடன் வைத்திருக்க காதலால் மட்டுமே முடியும் ! அந்தக் காதலை வார்த்தைகளும், வாழ்க்கையும் பிரதிபலித்தால் காதல் வாழும்.

இப்படி இருந்தால் தான் காதல் வளரும் என படிப்படியாய் சில வரையறைகளை வைத்தால் காதல் மூச்சுத் திணறும். அடுத்தவர் இயல்புக்காய் வருவதல்ல காதல், நமது இயல்பினால் வருவதே உண்மைக் காதல். பறிப்பவரின் இயல்புக்கேற்ப தாவரங்கள் பூப்பதில்லை! தனது இயல்புக்கேற்பவே பூக்கின்றன. காதலை உள்ளத்திலிருந்து வெளியெடுப்போம், எதிரே இருப்பவரின் எண்ணத்திலிருந்தல்ல. என்னை விட நீ பெரியவள் எனும் எண்ணம் எழுகையில் காதலுக்கு சிறகு முளைக்கும். ■

17 ஆம் பக்கம் பார்க்க...



# காதல் என்பது எதுவரை?

எதையும் விட பெரியவள் நீ எனும் சிந்தனை வளர்கையில் சிறகுக்கு வானம் கிடைக்கும். அந்த எண்ணம் இருவருக்கும் எழுகையில் காதலுக்கு ஆயுள் கிடைக்கும் ! அத்தகைய காதல் அழிவதில்லை.

வேற்றுமைகளை அறிந்து கொள்வதிலும் அதை அணிந்து கொள்வதிலும் காதல் வளரும். எல்லா இசைக்கருவிகளும் புல்லாங்குழல் ஆவதில்லை. எல்லா பறவைகளும் குயில்கள் ஆவதில்லை. வேற்றுமைகளே அழகு. காதலிலும் வேற்றுமைகளை விரும்பினால் காதலின் ஆயுள் கிணறு நிரம்பும்.

மன்னிப்பின் மகத்துவம் காதலின் தனித்துவம். அடுத்தவர் செய்யும் பிழைகளை மன்னிக்கும் மனம் காதலின் ஆழத்தின் அடையாளம். மன்னிக்க மறுக்கும் இடத்தில் காதலின் கிளைகள் பூ விடுவதில்லை. காதலின் நிலைகள் வேர் விடுவதில்லை. மன்னிப்பு கேட்கும் முன் மன்னிக்கும் மனமிருந்தால் காதல் தேயாமல் வளரும்.

காதல், வெறும் வார்த்தைகளினால் ஜாலம் கட்டி, செயல்களினால் ஓரங் கட்டுவதில்லை. சத்தத்தில் மௌனத்தையும், மௌனத்தில் சத்தத்தையும் பிரித்தெடுக்கும் வித்தை காதலுக்கு உண்டு. சொல்லாத வார்த்தைகளைப்



புரிந்து கொண்டு செயல்களினால் அதை சரிசெய்யும். அத்தகைய காதல் நீண்ட நெடிய காலம் வாழும்.

நான் எனும் சிந்தனை மறைந்து நாமென்பது உள்ளெங்கும் நிறைந்து நிற்பதில் காதல் வலிமையடையும். தன் கனியை தானுண்பதில்லை கொடிகள். தனக்கென எதையும் சேர்த்துக் கொள்வதில்லை உண்மைக் காதலர்கள். காதலின் வளர்ச்சி நாமென்னும் சிந்தனையின் தொடர்ச்சி. காதலுக்காய் செலவிடும் நேரங்கள், வாழ்க்கையை அழகாக்கும் காலங்கள். நிறைய நேரம் செலவிடும் காதல் நீண்டகாலம் வாழும். பகிரப்படும் நேரங்களே, காதலின் பரவசத்தின் பதுங்கு குழிகள். அவையே காதலை சாகாவரம் தந்து வாழவைப்பவை. நம்பிக்கை நங்கூரம் வாழ்க்கைக் கடலில் காதல் கப்பலை நிறுத்தும் வரை காதல் வாழும். நம்பிக்கையின் நங்கூரம் கழன்றி விழுகையில் காதல் கப்பல் நிலைகுலையும். எதிர்பாராத திசைகளில் பயணம் நீளும். நம்பிக்கை நங்கூரத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

மலருடன் அமர்ந்திருக்கும் வண்ணத்துப்பூச்சி போரடிக்கிறது என பறந்து போவதில்லை. துணையுடன் இருக்கும் போது போரடிக்காத காதல் நீண்டகால வாழ்க்கைக்கு உத்தரவாதம். சலிப்பை ஏற்படுத்தும் காதலுக்குள் இருப்பது உண்மை நேசத்தின் கருவல்ல. சில்மிஷ சிலிர்ப்பின் கரு.  சொல்லாத காதல் என்பது கொல்லப்பட்ட காதல் ! மின்மினி கூட தன் இருப்பை புள்ளி வெளிச்சத்தால் பூமிக்கு பறைசாற்றிக் கொண்டே தான் இருக்கிறது. காதல் மட்டும் ஏன் காரிருளுக்குள் கவிழ்ந்து கிடக்கிறது ? காதலில் பகிரப்படும் வார்த்தைகள் அதன் ஆயுள் ரேகையை நீளமாக்கும், காதல் பாதையை ஆழமாக்கும் !

ஆறுதல் கரங்கள் தயாராய் இருந்தால் காதல் அழிவதில்லை. பழிபோடும் நிலைவரினும் பழியேற்கும் மனநிலை கொண்டால் காதல் அழிவதில்லை. காதல் என்பது நதியின் ஸ்பரிசம், யார் தொட்டாலும் மனதில் சிலிர்க்கும்.

ஒரு சிலை செய்யும் நுணுக்கத்தில் காதல் நம்மைச் செதுக்கும். காதலின் உளிப்பிரயோகங்களுக்கு காதலர்கள் புன்னகையோடு ஒத்துழைத்தால் போதும். காதலின் உளிப்பிரயோகங்களே ஆயுளின் சிலையை அழகாக்கும்.

அடுத்தவரின் புன்னகையில் மகிழும் உணர்வே காதலின் வளர் நிலை. அடுத்தவர் புன்னகைக்க வேண்டும் என வாழ்வதே காதலின் உயர்நிலை. அந்த எண்ணத்தை இருவரின் இதயமும் ஏற்கும் போது காதலின் ஆயுள் கெட்டியாகும். எனில் காதல் என்பது எதுவரை? காதலர் விரும்பும் வரை !காதலர் விரும்புவது எதுவரைகாதலை விரும்பும் வரை!


# ஜேர்மனி டோட்முண்டில் தமிழர் வரலாறு நூல்வெளியீடு!












டோட்முண்டில் வாழும் திரு அன்னராசா அவர்கள் எழுதிய தமிழர் வரலாற்று நூல் வெளியீடு, டோட்முண்ட் தமிழர் அரங்கத்தில் சிறப்பாக 29.5.22 அன்று நடைபெற்றது.

வரவேற்புரையை ஜனனி அன்னராசா நிகழ்த்தினார். நிகழ்ச்சியின் தலைமைப்பொறுப்பை தமிழ்மணி நகுலா சிவநாதன் ஏற்று நடத்தினார். பிரதம விருந்தினராக ஏலையா முருகதாசன் அவர்களும், சிறப்பு விருந்தினராக விரிவுரையாளர் ஷறீகா சிவநாதன், அவர்களும் வாழ்த்துரைகளை கலைவிளக்கு பாக்கியநாதன், பன்னாட்டு எழுத்தாளர் ஒன்றிய தலைவர் திரு.சபேசன் அவர்களும் ஆற்றினர். நூலின் விமர்சனத்தை தமிழ்க்கல்விசேவை சிறிஜீவகன் அவர்கள் நிகழ்த்தினார். ஏற்புரையை நூல் ஆசிரியர் அன்னராசா நிகழ்த்தினார். நன்றியுரையை கம்சா ஜனகன் ஆற்ற, மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டத்துடன் விழா இனிது நிறைபெற்றது.


லூட்ஸ் மாதா புனிதப் பயணம் 2022

July, August மாதங்களில்






எமது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க
பஸ் மூலம் செல்ல ஒழுங்கு செய்து உள்ளோம்.
எமது சேவையின் சிறப்பை முன்னர்
பயணித்வர்கள் நன்கு அறிவர்.
பிரயாணம் செய்ய முன்கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்புகளுக்கு: 02972 7754
முருகா K.Muruga Handy: (49) 0175 850 1489

# கோரோனா தான் காரணம்!

(கதை)

சுருதி (அவுஸ்திரேலியா)



வைத்தியசாலை ஒரே கலவரமாக இருந்தது. கொரோனா நோயாளிகள் முட்டி வழிந்து கொண்டிருந்தார்கள்.

வழமையாக, அங்கே "பிடிக்குது" இங்கே பிடிக்குது' என்று சொல்லிக் கொண்டு வருபவர்களும், சில்லறை வியாதிகளுக்கெல்லாம் சத்திரசிகிச்சை செய்யுங்கள் என்றும் வரும் நோயாளிகள் இப்போது வருவதில்லை. இருகோடுகள் தத்துவத்தில் கொரோனா பெரிய கோடாகிவிட்டது.

"டொக்ரர் நரேன்" ஒரு சின்னப்பெண் கடுமையான வயிற்றுவலியில் துடித்தபடி தனது தாயாருடன் வந்திருக்கின்றார்."

டாக்டர் நரேன் வெளிநோயாளர் பிரிவுக்கு விரைந்து சென்றார்.

பதின்ம வயது வெள்ளைக்காரப் பெண் ஒருத்தி, ஒரு கையில் ஆங்கில நாவலும் மறுகையால் வயிற்றைப் பொத்தியபடியும் கூனிக்கொண்டு வேதனையில் துடித்து நின்றாள். உள்ளே அவர்கள் இருவரையும் கூட்டிச் சென்றார் டாக்டர் நரேன்.

"சரி ஸ்ரெல்லா" உடம்புக்கு என்ன செய்யுது?"

"கடுமையான வயிற்றுவலி என்று நான்கைந்து நாட்களாகச் சொல்கின்றாள். தூக்கமில்லை. ஒன்றும் சாப்பிடுகின்றாள் இல்லை" தாயார் பதில் சொன்னார்.

அவர்களின் உரையாடல் ஆங்கிலத்தில் தொடர்ந்தது. கிராமப்புறமொன்றின் பண்ணை நிலமொன்றில் குடியிருப்பதாகச் சொன்னார்கள்.

"கொரோனா என்று இளம்பிள்ளைகளை வீட்டுக்குள்ளை அடைஞ்சு இருக்கச் சொன்னா அதுகள் என்ன செய்யுறது?"

"உங்களுக்குத் தெரியுமா? உலகத்திலை கொரோனாவுக்காக அதி கமான நாட்கள் முடக்கநிலையில் இருந்த இடங்களிலை மெல்பேர்ண் நம்பர் வண்."

சம்பந்தமில்லாமல் எதை எதையோ உளறினார் தாயார்.

டாக்டர் நரேன், அந்தப் பெண்ணை சரிந்து படுக்கும்படி சொல்லிவிட்டு மறைப்புத்துணியை இழுத்து மூடினார். தாயார் கதிரையில் இருந்து நடப்பவற்றை உன்னிப்பாகக் கவனித்தார்.

அவளைப் பரீட்சித்துக் கொண்டு, அதே நேரம் நோய் பற்றிய கேள்விகளை ஒவ்வொன்றாக அவளிடம் கேட்டுக் கொண்டிருந்தார் டாக்டர். சட்டென ஒரு மின்னல் கணத்தில் வெட்டியதைப் போன்று, டாக்டரின் மூளைக்குள் தெறித்தது. அந்தப் பெண்ணை கூர்ந்து உற்று நோக்கினார். பால் வடியும் முகம்.

"உங்களுக்கு இப்ப என்ன வயசாகின்றது?"

"பதினாறு"

அவளின் தோற்றம் அவள் சொன்னதைவிட சற்று உயர்வாகக் காட்டியது. பெற்றோருக்குத் தெரியாமல் இவள் ஏதோ கிறுக்குத்தனம் செய்திருக்கின்றாள்.

அவளைப் பரீட்சிப்பதை விடுத்து, படுக்கையில் இருந்து எழுந்திருக்கச் சொன்னார். மறைப்புத்துணியைச் சுருக்கிவிட்டார். வெளியே வரும்படி சொன்னார்.

"உங்கள் மகளுடன் தனியாகக் கதைக்க வேண்டும். நீங்கள் கொஞ்ச நேரம் வெளியே போய் இருக்க முடியுமா?" ஸ்ரெல்லாவின் தாயாரைப் பார்த்துக் கேட்டார் டாக்டர் நரேன்.

"அம்மாவுக்கு எல்லாம் தெரியும்" என்றாள் ஸ்ரெல்லா.

டாக்டருக்குத் தூக்கி வாரிப் போட்டது. தாயாரை வெளியே போய் உட்கார முடியுமா என்று கேட்ட டாக்டர், இப்பொழுது மகளை வெளியே போய் சிறிது நேரம் அமரும்படி சொன்னார். ஸ்ரெல்லா வெளியே போனதும், "ஒரு பிள்ளையின் இளமைக்காலம் எப்படியிருக்க வேண்டும் என்று உங்களுக்குத் தெரிய வேண்டும். பள்ளிக்கூடம் போக வேண்டிய வயதில் ஒரு சிறுபெண்ணை நீங்கள் குடும்ப வாழ்க்கைக்குள் தள்ளிவிட நினைக்கின்றீர்கள்" கொஞ்சம் காரமாக சத்தமிட்டார் டாக்டர்.

"எல்லாத்துக்கும் கொரோனா தான் காரணம்" என்றார் ஸ்ரெல்லாவின் தாயார்.

டாக்டர் புரியாமல் தலையைப் பிறாண்டினார். ஒரு தந்தையின் ஸ்தானத்தில் அந்தப் பெண் பற்றிக் கவலை கொண்டார்.

"சிட்னியிலிருந்து வழக்கமாக பண்ணைக்குப் பொருட்கள் எற்றி இறக்க வாற பெடியன். ஒருநாள் இரவு தங்கிப் போறதெண்டா அவன் தன்ரை வாகனத்துக்குள்ளேயே இருந்து கொள்ளுவான். மூண்டு நாலு மாதம் நாட்டை முடக்கினா அவன் எப்பிடித் தன்ரை வீட்டை போறது. எங்கட வீட்டிலை ஒரு அறையை ஒதுக்கி அவனுக்குக் குடுத்தோம்" ஸ்ரெல்லாவின் தாயார் சொல்லிக்கொண்டே போனார்.

ஒட்டகத்துக்கு இடம் குடுத்த கதையைக் கேட்கும் மன நிலையில் டாக்டர் நரேன் இல்லை. திரும்பவும் ஸ்ரெல்லாவைக் கூப்பிட்டு முதலில் இருந்து தனது பரிசோதனையைத் தொடங்கினார். மனநிலை மனக்குழப்பம் பயம் பதட்டம் இவற்றினால் ஸ்ரெல்லா பாதிப்படைந்திருக்கலாம். அதுவே வயிற்றுவலிக்கும் காரணமாக இருக்கலாம். டாக்டரால் ஒன்றையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

பதின்ம வயதுப் பிள்ளைகள் கர்ப்பமாகும் போது ஆலோசனை வழங்கும் நிலையத்திற்கும், மகப்பேறு மருத்துவருக்கும் தனித்தனியாகக் கடிதங்கள் எழுதி தாயாரிடம் குடுத்துவிட்டு, "தாமதியாமல் உடனே சந்தியுங்கள்" என்றார் டாக்டர். அதற்கு அவர் "எல்லாத்துக்கும் கொரோனா தன் காரணம்" என்றார். ■

02 ஆம் பக்கத் தொடர்ச்சி... »

## தீக்குள் விரலை வைத்தால்!

அவரை இயக்கியுள்ளது என நம்பமுடிகிறது.

விபத்து முடிந்தபின் நான் என்றால், இப்படி செய்து இருப்பேன், அப்படி செய்து இருப்பேன் என எண்ணுவதும், கூறுவதும் தவறு. அந்த சந்தர்ப்பத்தில் எவராக இருந்தாலும் முதல் (முண்ணான்) தெறிவினையே தெறித்து இயக்கியிருக்கும்.

இருந்தாலும் இந்த விபத்தை அறிந்தவர்கள் எதிர்காலத்தில் இப்படியான சந்தர்ப்பங்களில் 'நானாக இருந்திருந்தால் எதனை செய்வேன் என்று சொல்கிறீர்களோ' அதனைச் செய்தால் யாவருக்கும் மகிழ்ச்சியே, இதில் மாற்றுக்கருத்திற்கு இடம் இல்லை. ஆனால் இவற்றை எல்லாம் தாண்டி வருவதே விபத்து. நாளை எதுவும் எவருக்கும் நடக்கலாம்! முடிந்தவரை பாதுகாப்பாகச் செயற்படுவோம். ■


ஆசியா சமுத்திரம்
Asiatischer super markt
R.Ragunathan
Email: mediajara@gmail.com
Handy: 01520 900 90 30
Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281

ஆசிய, ஆபிரிக்க மற்றும் இலங்கை, இந்திய மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள், கடல் உணவுவகைகள் அனைத்திற்கும் எம்மை நாடுங்கள்.
TEMPO VALUTRANS Ria MoneyGram
துரித பணமாற்றுச் சேவை
Hückelhoven

மங்கல இசைக்குழு
உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும் நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட
தவில் மேதை அளவையூர் குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச் செல்வன்
N.K.Raguraman


Dresdener Str.6 50126 Bergheim Germany
Tel: 0049 157 89 15 95 71
0049 2271 670236 | 0049 160 91146240



# ஜேர்மனியில் சுமார் 11% மக்கள் மனத்தளர்ச்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்

## மனத்தளர்ச்சி என்றால் என்ன?

உலகில் வாழும் மக்களிடையே வேலை செய்ய இயலாமல் போவதற்கு மிக முக்கிய காரணமாகக் கருதப்படுவது Depression என்று ஆங்கிலத்தில் கூறப்படும் மனத்தளர்ச்சி ஆகும். ஜெர்மனியில் AOK ஆகிய உடனலக் காப்பீடு எடுத்த புள்ளியியல் படி சுமார் 11% மக்கள் மனத்தளர்ச்சியில் பாதிக்கப்பட்டுள்ளனர். இது ஒரு வித மன நோயாக விளங்கும் காரணத்தால், இதை கொலஸ்ட்ரால் அதிகமாகி விட்டது அல்லது இரத்த அழுத்தம் குறைந்து விட்டது என்று இலகுவாகச் சொல்லி விட முடியாது. இதிலும் கஷ்டத்தைத் தரும் விஷயம் என்னவென்றால் மனத்தளர்ச்சிக்கும் மனதில் பொதுவாக ஏற்படும் மனக் கவலைகளுக்கும் வித்தியாசம் காண்பது தான். உங்களில் ஒவ்வொருவரும் உங்கள் வாழ்க்கையில் பல தடவைகள் மனக் கவலைகளைக் கொண்டிருப்பீர்கள். சிறு வயதில் பள்ளியில் மார்க் சரியாக வாங்காமல் போனால், ஒரு விளையாட்டுப் பந்தையத்தில் முதலிடத்தை எடுக்காமல் இருந்தால், வேலையை இழந்தால், உங்கள் அன்பான வாழ்க்கைத் துணை அல்லது பெற்றோர், சகோதரங்களுடன் சண்டை ஏற்பட்ட வேளைகளில் மனக்கவலை நிச்சயமாக ஏற்பட்டிருக்கும். ஏன் அதை விடுங்கள், வெளியே எட்டிப் பார்க்கும் போது ஒரு நாள் முழுவதும் இருண்டு மழை பெய்தாலே நமக்குள் ஒரு விதமான கவலை தோன்றும், சரி தானே? இது எல்லாமே எல்லோருமே அனுபவிக்கும் ஒரு பொதுவான உணர்ச்சி தான்.

இதில் இருக்கும் விசேஷம் என்னவென்றால், நமது மனக்கவலைக்குக் காரணமாக இருந்த அந்த விஷயம் மாறினாலோ அல்லது நம்மைச் சுற்றி ஏதும் சந்தோஷமான ஒரு நிகழ்வு நடந்தாலோ, நாம் அந்த மனக்கவலையை விட்டு வெளியேறிவிடுவோம். அத்துடன் அந்தக் கவலை நம்மை விட்டுப் போய் விடும்.

ஆனால் மனத்தளர்ச்சி அப்படி இல்லை! இது ஒரு விதமான நோய் ஆகும். அதைப் "போ" "போ" என்று சொல்வதால் அது போய் விடாது. உங்கள் கை முறிந்துவிட்டால், உங்கள் வாயால் "வலி போய்விடும்" என்று சொல்வதால் மட்டும் வலி போகுமா என்ன? அதே போல் தான் மனத்தளர்ச்சியும் ஒரு நோய் ஆகும். குறிப்பாகச் சொல்லப் போனால் இது ஒரு மன நோய் ஆகும். மனத்தளர்ச்சி வந்தால் அது தொடர்ந்து குறைந்தது இரண்டு வாரங்கள் வரை நீடித்து நம்மை வேலை செய்யாமல், விளையாட முடியாமல், ஏன் நாம் பாசத்தைக் கொட்ட விரும்பும் நமது குடும்பத்தினருடன் கூட அன்பாக இருக்க விடாது.



Dr.நிரோஷன் தில்லைநாதன் (யேர்மனி)

மனத்தளர்ச்சி உள்ளவர்களில் பொதுவாகக் காணப்படும் அறிகுறிகள் இவை தான்: மனச்சோர்வு, பொதுவாக விரும்பிச் செய்த விஷயங்களில் ஆர்வத்தை இழப்பது, சாப்பாட்டில் விருப்பம் குறைவது, தம்மைத் தாமே பிரயோசன மற்றவர் என்று நினைப்பது, தாம் தான் எல்லாப் பிரச்சனைகளுக்கும் காரணம் என்று எண்ணுவது அல்லது மிகவும் குறைவாக அல்லது மிகவும் அதிகமாகத் துாங்குவது, செறிவு இல்லாமை, ஓய்வின்மை, செயலற்ற தன்மை, ஆற்றலின்மை போன்றவை மட்டுமில்லாமல் தற்கொலை செய்யும் எண்ணங்கள் கூட இருக்கும். இதில் குறிக்கப்பட்ட அறிகுறிகளில் குறைந்தது ஐந்து அறிகுறிகளை நீங்கள் ஒரு நபரில் கண்டால், மனநல வழிகாட்டுதலின் படி அந்த நபருக்கு மனத்தளர்ச்சி ஏற்பட்டுவிட்டது என்று எண்ணலாம்.

மனத்தளர்ச்சியின் விளைவுகளை ஒருவரின் நடத்தை முறையில் மட்டும் காணலாம் என்று இல்லை. இதன் விளைவுகளை மூளையிலும் கண்டு கொள்ளலாம். ஒரு சில மாற்றங்களை பாதிக்கப்பட்டவர்களின் மூளைகளை x-ray ஊடாக பார்க்கும் போதே அறிந்து கொள்ளலாம். அவர்களின் மூளையின் சில பகுதிகள், குறிப்பாக முன் மடல் (frontal lobe) மற்றும் ஹிப்போகாம்பஸ் ஆகியவற்றின் அளவுகள் சற்று சிறிதாகியிருக்கும். இதைத் தவிர்த்து நரம்பியக்கடத்திகள் என்று அழைக்கப்படும் நெரசழவசயளெஅவைவநசள நமது மூளை சரியாக வேலை செய்வதற்கு முக்கிய செயலை ஆற்றி வருகின்றன. மனத்தளர்ச்சி உள்ளவர்களில் மூளைகளில் இந்த நரம்பியக்கடத்திகள் பரிமாற்றத்தில் (குறிப்பாக serotonin, norepinephrine, dopamine) இடையூறை அவதானிக்கலாம். தொடர்ந்து தூக்கத்தில் மற்றும் உடலில் காணப்படும் hormones அதாவது இயக்குநீர்களில், உதாரணத்திற்கு கோர்டிசோல் மற்றும் தைரோய்ட் போன்றவற்றில் மாற்றங்கள் ஏற்படும்.

இன்று வரை ஆராய்ச்சியாளர்கள் மனத்தளர்ச்சி ஏற்படுவதற்கான மூலகாரணங்களை ஆராய்ந்துகொண்டு

30 ஆம் பக்கம் பார்க்க...

## யேர்மனியில் ஆடிமாதம் தேர்த்திருவிழா காணும் ஆலயங்கள்

**எசன் ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி ஆலயம்**
Tel: 0201 806 74 33
அலங்கார உற்சவம்: 02.07.2022-
தேர்: 10.07.2022
2021Kloster Str 49 a, 45149 Essen

**டோட்மூண்ட் ஸ்ரீ சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயம்**
Tel: 0231 72515165
கொடி: 02.07.2022 - தேர்:10.07.2022
Klefer Str 24, 44225 Dortmund

**கிறிவீல்ட் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயம்**
Tel: 02151 565 00 45
கொடி: 02.07.2022 - தேர்: 10.07.2022
Girmesgath 95, 47803 Krefeld



தொகுப்பு: ஆன்மிகத்தென்றல்
த.புவனேந்திரன் (யேர்மனி)

**பிறாங்போட் நாகபூசணி அம்பாள் ஆலயம்**
கொடி: 03.07.2022 -
தேர்: 16.07.2022
Adelbert Str 61-63 |
60486 Frankfurt/M |
Tel: 069 979 45 618

**கொமஸ்பாக் குறிஞ்சிக்குமரன் ஆலயம்**
கொடி: 09.07.2022 - தேர்: 17.07.2022
Industrie Str 7; 51643 Gummersbach
Tel: 02261-5015964, 017645684711

**ஹம் திருநல்லூர் ஆறுமுக வேல்லழகர் ஆலயம்**
கொடி: 16.07.2022 - தேர்: 24.07.2022
Roon Str 2 a; 59065 Hamm|Tel: 02381 291 03

**சுட்காட் சித்திவிநாயகர் அலயம்**
கொடி: 22.07.2022 தேர்: 31.07.2022
Waiblnger Str 30; 70372 Suttgart | Tel: 0711 470 30 47

**சுவெற்ரா கனக துர்க்கா அம்பாள்ஆலயம்**
கொடி: 23.07.2022 - தேர்: 31.07.2022
Roberte koch Str 5 a, 58239 Schwerte
Tel: 02304 16721

நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2021 ஆண்டுக்கான புத்தம் புது டிசைன்கள், கலைநயம் மிளிரும் தரமான தங்க நகைகள் எம் கையிருப்பில்.



பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்

திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.







# மெய்வெளியின் காத்தாயி காதை

**மாதவி சிவலீலனின் பார்வை**

சனிக்கிழமையன்று 11.06.2022 Trinity Centre, East Ham இல் மலையக இலக்கிய மாநாடு ஒருநாள் நிகழ்வாக நடைபெற்றது. அங்கு சிறப்பு நிகழ்ச்சியாக 'காத்தாயி' நாடகம் சாம் பிரதீபன், ரஜித்தா சாம் தம்பதியினரால் மேடையேற்றப்பட்டது. இந்நாடகம் பற்றிய விளம்பரங்கள் முன்னதாக வந்த வண்ணமிருந்த போது யார் இந்தக் காத்தாயி என்கின்ற கேள்வி எனக்குள்ளேயிருந்தது.

மு.நித்தி சேருடன் உரையாடும் போது அத்தாய் பற்றிய செய்தியைக் கூறியிருந்தார். 1994 ஆம் ஆண்டு மலையகத்தில் தன்னைத் தேடி வந்த போராளி இளைஞனுக்கு அடைக்கலம் கொடுத்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்ட அவர் பத்தொன்பது வருடங்கள் அச்சிறையில் நோய்களோடு இருந்து அங்கேயே மரணித்துப் போனார். அவருக்காக எவருமே குரல் கொடுக்கவும் இல்லை. அச்சம் காரணமாக அவரது புகைப்படங்களையும் உறவினர்கள் எரித்து விட்டனர். இன்று அவரைப் பார்த்தவர்கள் பழகியவர்கள் நினைவிலேயே அவரது உருவம் நினைவு கூரப்படுகின்றது.

மாநாட்டு நிகழ்வுகளின் இடையில் மதிய உணவிற்கு முன்பாக நாடகத்திற்காகப் பார்வையாளர்கள் பசி மறந்து தம்மைத் தயார்ப்படுத்தி அமர்ந்து கொண்டனர். நாடகம் பார்க்கும் குதூகலம் சிரிப்பாகவும் சிறு சிறு உரையாடல்களாகவும் ஆங்காங்கே நடைபெற்றுக் கொண்டிருந்தது. திடீரென அதட்டலான குரலில் சாமும் சுஜீத்தும் சபையின் சிரிப்பைக் குதூகலத்தை அலட்சியத்தைக் கட்டுப்படுத்தினர், மனம் ஒப்பாத இறுக்கமான இராணுவ சூழலுக்குள் அகப்பட்ட உணர்வைத் தூண்டிச் சபை அடங்கிக் கிடந்தது. கைகளில் கொளுத்திய சாம்பிராணிக்குச்சுகள் திணிக்கப்பட்டன. அன்று அத்தாய்க்கு நடந்த கொடூரத்தைத் தட்டிக் கேட்காத சமூகத்தை முன்னிறுத்தியதாக வாயைக் கட்டிக் கொள்ள கறுப்புத் துணி கொடுக்கப்பட்டது. வாய் மூடிச் சபை மயான அமைதியாகியது.

மெல்லப் படர்ந்த சாம்பிராணிப் புகை மரண நிகழ்வொன்றை உருவாக்கச் சுவாசிக்க முடியாமலும் சிலர் திணறச் சூழல் அபத்தமாகியது. அப்போது காத்தாயி உடல் வெள்ளைத் துணியால் மூடி நால்வரால் கொண்டுவரப்பட்டுக் கிடத்தப்பட்டது. அக்காட்சி மனதைக் குமுற வைக்க, அத்தாயின் கதை பின்னோக்கிய நினைவாகக் காட்சிப்படுத் தப்பட்டது. வதைமுகாமில் அடிகளுக்குள்ளும் வசைகளுக்குள்ளும் திணறும் காத்தாயியாக ரஜித்தா ஈனக்குரல் எடுத்துப் பேசினார். இல்லை, அப்பாத்திரமாகவே மாறித் திணறத் தொடங்கினார். சாம் கொடூர இராணுவ அதிகாரியாக விளங்கிக் கர்ச்சிக்கும் குரல் சபையை அச்சமூட்டியது. இடையிடையே 'அம்மாவுக்கு ஒன்றும் தெரியாது அவரை விட்டு விடுங்கள்' என அத்தாயின் வீட்டில் தங்கிய வரதனின் வாக்குமூலமாக சுஜித் குரல் கொடுத்தார். இராணுவ அட்டூழியத்துக்குள் அவை எடுபடாமல் போயிற்று.

கறுத்த உடையில் இருண்ட சூழலைப் பிரதிபலித்த நான்கு சிறுவர்களும் தங்களுடைய பங்களிப்பை அழகாக வழங்கியிருந்தனர். ஈழத்து விடுதலைப் போராட்டத்தில் தெரிந்தும் தெரியாமலும் போராளிகளைத் தாய்ப் பாசத்துடன் அரவணைத்த காரணத்தால் வீடுகளிலும் வீதிகளிலும் வதை முகாம்களிலும் துன்புறுத்தப்பட்டுக் கொல்லப்பட்ட அனைத்துத் தாய்மார்களின் பிரதிநிதியாகக் காத்தாயித் தாய், அன்று கண்களில் கண்ணீரை வர வைத்தார். பாரதிதாசன் 'எது கலை' எனும் கவிதையைப் பின்வருமாறு முடிப்பார்.

**"என்நண்பர் பகவதியாம்**
**நடிகர் ஓர்நாள்**
**எழிலுறும் நாடக அரங்கை**
**அடைந்தார் ஆங்கே**
**என்நண்பர் அடையாளம்**
**மறந்தேனி ல்லை**
**இடர்சூழ்ந்தனை நோக்கி**
**அறம் விளக்கும்**
**சொன்மழையைச்**
**சினங்கூட்டி, மெய்ப்பாடேற்றித்**
**தொடங்கினார் விழிப்புற்ற**
**ஏழைத்தோழன்**
**தனைக் கண்டேன் பகவதியை**
**மறந்தேன்மறக்க**
**வைத்த தெது? அதுதான்**
**கலையாம் அன்றோ!"**

இக்கவிதை வரியை ரஜித்தா, சாம் நடிப்பில் நான் கண்டேன். அவர்கள் இருவரும் பாத்திரங்களுக்குள் ஒன்றிப் போயினர். சாம், வரதனைத் தெரியுமென ஒத்துக் கொள் என்று ஒவ்வொரு தடவையும் அதட்டும் போதும் அடிக்கும் போதும் ரஜித்தா கெஞ்சுவதும் கலங்குவதும் பதட்டமடைவதும் அழுவதும் ஆதங்கப்படுவதும் நிலைதடுமாறி விழுவதும் ஜீரணிக்க முடியாத துன்பியல் நிகழ்வாக அமைந்தது. உண்மையில் ஒருகணம் அந்த இராணுவ அதிகாரியின் பொல்லைப் பறித்து அவருக்கு விளாச வேண்டுமென என் கால்கள் முன்னோக்கி நகர எத்தனித்தன. மலையக் மண்ணில் சாதாரணக் குடும்பப் பின்னணியில் வாழ்ந்த அத்தாயிற்காக எவரும் அன்று ஆதரவு கொடுக்கவில்லை. உதவி செய்யவும் இல்லை. யாருமற்ற அனாதையாக உலகில் மறக்கப்பட்ட ஜீவனாக சிறைக்குள் பத்தொன்பது வருடங்கள் வாழ்ந்து புற்றுநோயோடும் படுக்கைப் புண்ணோடும் அவதியுற்று மடிந்த அவரின் வாழ்க்கை மறக்கடிக்கப்பட்ட சூழலில் இலண்டனில் அவருக்கு இவர்களால் உயிர் கொடுக்கப்பட்டு அவருக்கு நடந்த அநீதி உலகறியச் செய்யப்பட்டுள்ளது. பேசாப் பொருளைப் பேச வைத்த விம்பம் குழுவினர் வரலாற்றில் நின்று விட்டனர்.



நாடகத்தின் நிறைவுப் பகுதியில் சபையே கலங்கி நின்றது. யாவரும் எழுந்து நின்று கரங்களைத் தட்டிக் கலைஞர்களுக்குப் பாராட்டுத் தெரிவித் ததுடன் அத்தாயிற்கும் மரியாதை செலுத்தினர். பலரின் கண்களில் கண்ணீர் ததும்பியது. ஓவியர் ராஜா பெரிதாக அழுதே விட்டார். பின்னணி இசை, உடையலங்காரம், காட்சியமைப்பு யாவுமே உணர்வுபூர்வமாக இருந்து அக்கொடூர சூழலையும் சோகத்தையும் ஏற்படுத்தின.

வலி தரும் படைப்பைத் தரமான படைப்பாகத் தந்த சாம், ரஜித்தா இருவருக்கும் அவர்களோடு தோள் நின்று உழைத்த சுஜித், காண்டீபன், அலன், றித்திக், அனுக்ஷன், அஞ்சனா, ஷாருகா, றாஜீ, மோதிலா ஆகியோருக்கும் பாராட்டுதல்களும் நன்றியும்.








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# இலக்கியத்தில் இவர்கள்... 23

கௌசி (யேர்மனி)

# தனிக்குடித்தனம்

## திருமணமும் மணமுறிவுகளும்

மனிதனுடைய வாழ்க்கைப் படிமானங்களில் ஒரு கட்டம் குடும்ப வாழ்க்கை. இக்குடும்பவாழ்க்கை என்பது மனிதனுடைய வாழ்க்கையிலே மிகக் கடினமான வாழ்க்கைப் படியாக அமைகின்றது. ஆயினும் அவ்வாழ்க்கை மூலம் தனிமனித ஒழுக்கம், விட்டுக்கொடுப்புக்கள், தளர்ந்த பிடிவாதம், அன்பு, பாசம், ஒற்றுமை, எதிர்பார்ப்புக்கள் எனப் பல விடயங்கள் கற்றுக் கொள்ளுகின்றான். ஒரு பெண் ஆணையோ ஒரு ஆண் பெண்ணையோ தேவாலயத்திலோ இந்து ஆலயத்திலோ கைப்பிடிக்கும் போது ஒருத்தருக்கொருத்தர் இன்பதுன்பங்களில் பங்கெடுத்து வாழ்வோம் என்று கூறியே கையெழுத்திட்டு உறுதிமொழியளிக்கின்றார்கள். ஒரு தனிமனிதன் சமுதாயத்தின் ஒரு அங்கமாக வாழுகின்ற போது பல்வேறுபட்ட பிரச்சினைகளைச் சந்திப்பதைச் சமூகவியல் ஆய்விலே ஆய்வாளர்கள் கண்டு பிடிக்கின்றனர்.

இதற்கு பல்வேறுபட்ட குடும்பப் பழக்கவழக்கங்களிலும், பண்பாட்டு அம்சங்களிலும், கலாசார விழுமியங்களிலும் இருந்து வந்து இணைகின்ற மக்களிடையே ஏற்படுகின்ற புரிந்துணர்வுகள் காரணமாக அமைகின்றன. அத்துடன் வயது, பணம், அந்தஸ்து, சமூக செயற்பாடுகள் போன்றவையும் முரண்பாடுகளாக அமைகின்றன.



அக்காலத்தில் 12 வயதிலேயே திருமணம் செய்வதற்குரிய காலமாகக் கணித்திருந்தனர். முற்காலத் திலே பல திருமணங்கள் பெற்றோர் பார்த்துப் பேசிச் செய்த வைத்ததாகவும் அமைந்திருந்தன. தூரத்து உறவினர்கள், பெண்கேட்டு வருவதும் அவர்கள் பெண்ணின் தந்தைக்கு பெரும் பொருள் கொடுத்து திருமணத்தை உறுதி செய்வதும், இல்லையென்றால், உறவில்லாத ஒரு ஆண் பெற்றோரிடம் தன்னுடைய காதலைச் சொல்லி அவர்களுடன் பெண் கேட்டு அவளை மணம் முடிக்கின்ற முறையும் வழக்கமாக இருந்தது. இதனை குறுந்தொகை 351 அவது பாடலிலே

**வளையோய் உவந்திசின்**
**விரைவுறு கொடுந்தாள்**
**அளைவாழ் அலவன்**
**கூருகிர் வரித்த**
**ஈர்மணல் மலிர்நெறி**
**சிதைய இழுமென**
**உருமிசைப் புணரி**
**உடைதரும் துறைவர்க்கு**
**உரிமை செப்பினர் நமரே**
**விரியலர்ப் புன்னை**
**ஓங்கிய புலாலஞ் சேரி**
**இன்னகை ஆயத் தாரோடு**
**இன்னும் அற்றோ**
**இவ் வழுங்க லூரே.**

வளையல்களை அணிந்தவளே நம் சுற்றத்தார் விரைதலையுடைய வளைந்த காலையுடைய வளையின்கண் வாழும் நண்டு தன் கூரிய நகத்தினால் கீறிய ஈரமுள்ள மணலையுடைய நீருள்ள வழி சிதையும்படி இழுமென்னும் ஓசையுண்டாக இடியினது முழக்கத்தையுடைய அலைகள் உடையும் துறையையுடைய தலைவருக்கு நீ உரியாயென்றமையை உடம் பட்டுக் கூறினர் அதனையறிந்து நான் மகிழ்ந்தேன் விரிந்த மலர்களையுடைய புன்னை மரங்கள் உயர்ந்து வளர்ந்த புலால் நாற்றத்தை யுடைய சேரியிடத்துள்ள இனிய நகையையுடைய மகளிர் கூட்டத்தினரோடு இந்த ஆரவாரத்தையுடைய ஊர் இன்னும் மகிழ்ச்சியுடையதாகும் என அம்மூவனார் என்னும் புலவர் எடுத்துக் காட்டுகின்றார்.

ஆரம்ப காலங்களில் ஊரறியத் திருமணங்கள் இருந்ததில்லை. ஆனால் பல மணமுறிவுகள், ஏமாற்றங்கள், நம்பிக்கை இழப்புக்கள் ஊரறியத் திருமணம் செய்ய வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியது. பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப என்று திருமணத் தோற்றம் பற்றித் தொல்காப்பியர் எடுத்துரைக்கின்றார். தாய்வழிச் சமூகமாக இருந்தபோது சடங்கு ரீதியான பண்பைத் திருமணங்கள் பெறவில்லை. பெண் தனக்கான ஆணைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் பெற்றிருந்தாள். உடைமையற்ற சமூகமாக இருந்த இனக்குழுக்கள் மற்ற குழுக்களுடனான தம் உறவைப் பெருக்கிக்கொள்ள, உயரிய உடைமையான தம் உடல்களைப் பகிர்ந்து கொண்டன என்கிறார்கள் சமூகவியலாளர்கள். இன்று ஊரறியத் திருமணங்கள் நடந்தும் மணமுறிவுகள் அதிகரித்துள்ளன.

சங்ககாலத்தில் திருமணமான தம்பதிகள் தனிக்குடித்தனமாக வாழுகின்ற போது பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டாலும் அன்பினால் ஒன்றுபட்டு வாழுகின்ற வாழ்க்கையே மதிப்புமிக்க வாழ்வாகக் கருதப்பட்டது. செல்வச்செழிப்புடன் தேனும் பாலும் ஊட்டி வளர்க்கப்பட்ட பெண்ணாக இருந்தாலும் தலைவன் வீட்டில் செல்வச் செழிப்பு இல்லாத நிலையிலே வீட்டிலே உணவில்லாமல் தண்ணீரை உணவாக உண்பதும் அந்தத் தண்ணீரும் விலங்குகள் குடிக்கின்ற நீராகவும் பலகாத தூரம் நடந்து சென்று எடுப்பதாகவும் கூறப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலையிலும் தலைவி தன் பிறந்த வீட்டுக்குச் சென்று கையேந்தி நிற்காது வீட்டிலே எந்நிலையையும் உரைக்காது வாழுகின்ற தன்மையையுடையதாக இருந்தது.

**அன்னாய் வாழி வேண்டன்னை**
**நம் படப்பைத்**
**தேன் மயங்கு பாலினும்**
**இனிய அவன் நாட்டு**
**உவலைக் கூவல் கீழ**
**மான் உண்டு எஞ்சிய கலிழ் நீரே**

இது தற்காலத்தில் சின்னச்சின்ன காரணங்களுக்காக மணமுறிவேற்பட்டுப் பிறந்த வீட்டுக்குப் போகின்ற பெண்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியதாக இருக்கின்றது.

கண்ணகி, காரைக் காலம்மையார் போன்ற இலக்கிய கதாபாத்திரங்களும் தனிக்குடித்தனம் நடத்தியவர் களே. ஆனால், அவர்களின் பாரிய பிரச்சினைகளுக்கு இந்த



தனிக்குடித்தனமும் காரணமாக இருந் திருக்கலாம் என்று எண்ணக்கிடக்கின்றது. மதுரை எரிக்கும் அளவு சக்தி வாய்ந்த ஆளுமை மிக்கவளாக கண்ணகியும் மாங்கனி நினைத்தவுடன் பெறக்கூடிய சக்தி மிக்கவளாக காரைக் காலம்மையாரும் இருந்தனர். தனிக்குடித்தன வாழ்க்கையிலே அவர்கள் இருவருடைய ஆளுமையையும் பல சந்தர்ப்பங்களில் கோவலன். பரமதத்தன் ஆகிய இருவரும் சந்தித்திருக்கலாம். இதனால், அதனை ஏற்றுக்கொள்ளமுடியாமல் பிரிந்து சென்றிருக்கலாம். இந்தப் பிரிவு கூட்டுக் குடும்பமாக வாழ்ந்திருந்தால் தடுக்கப்பட்டிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஆனாலும் தற்கால சூழ்நிலையில் மணமுறிவுகள் அதிகரித்திருந்தாலும் தனிக்குடித்தனம் அவசியம் என்பதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. எவ்வாறாயினும் மணமுறிவுகளை தவிர்த்து அது கூட்டுக் குடும்பமோ தனிக்குடித்தனமோ குடும்பவாழ்க்கை வாழும் காலகட்டமே மனித வாழ்க்கையில் பாரிய பிரச்சினைகளை வென்று சாதிக்கும் ஒரு காலகட்டமாக அமைகின்றது.





ஓவியம்: கண்ணா

‘சுமையினை இறக்கிச் சும்மா நிற்க’


# உருத்திரமூர்த்தி - சிறு நண்டு மணல் மீது படம் ஒன்று கீறும்

உலகில் உள்ள அனைத்தும் போல இலக்கியமும் மாறிக்கொண்டே இருக்கும். சில சமயங்களில் போர் குணத் துடனும், சில சமயங்களில் பெரும் கூச்சலுடனும் இன்னும் பல சமயங்களில் மௌனித்தும் தமக்கென்ற மாற்றத்திற்கு வழி செய்து கொள்கின்றன.

இந்த மரபுக் கவிதைகள் என்னதான் சொல்கின்றன? எந்த வகையில் அவை மரபுக்கவிதை என்ற பெயரைச் சூடிக்கொள்கின்றன என்று பார்த்தால், மரபுக் கவிதை என்பவை அறம், ஒழுக்கம், மதபோதனை, என்பன பாடுபொருளாகவும், புலமையின் வெளிப்பாடு என்பதும் இங்கே முக்கித்துவம் பெற்று நிற்ப்பதைக்காணலாம் இந்த மரபுகவிதைக்களும் ஒரு காலத்தில் புதுமையானதாவே காணப்பட்டிருக்கும் என்றால் இன்று காணும் புதுக்கவிதையே எமது நாளைய மரபுகவிதை என்பதே உண்மை.

மரபுக்கவிதை காலத்தால் முந்தியது. தொன்றுதொட்டு வரும் தன்மையை மரபு என்கிறோம். தோல்காப்பியம் என்னும் நூல் மூலம் மூவாயிரம் வருடங்களுக்கு முன் தோன்றிய இலக்கண நூல் செய்யுள் தொடர்பான எழுத்து மரபு, பாடுபொருள்,யாப்பு ஆகியவைகளைக் கொண்டிருக்கும். இவ்வாறுதான் எழுதப்படல் வேண்டும் என்ற கட்டுக்குள்ச் சுழன்று சொற்கள் தேடி கருத்துப் புதியனவாயினும் இலக்கணத்தின்படி பாடுதல் மரபுக்கவிதை. மரபுக்கவிதை தொழிலுக்கு ஏற்றதாக, மன்னர்காலத்தில் புகழ்பாடுதலாகவும், கோயில்களில் இறைபுகழ் பற்றியதாகவும் இருந்த நிலையை அறியலாம்.

1890களில் மேலத்தேய நாடுகளில் மரப்பை புறக்கணித்து ஆரம்பித்த வசனநடைக் கவிதைகள் பிறர் இதுவரை பேசா பொருட்களைக் கொண்டதாக புறப்பட்டு வந்தன. கவிதையின் கரு முக்கியமே ஒழிய சொல்லோசையில் காட்டுவதன்று என எம் பாரதியும் வசனநடைக் கவிதைகளை நேசித்தவரானார். மரபுவழிக் கவிஞர்கள் மூலம் விமர்சிக்கப்பட்டும், யாப்பில்லாக்கவிதை, இலகு கவிதை, வசனநடைக்கவிதை என்ற பெயர்களைச் சூட்டிக்கொண்டு இன்று புதுக்கவிதையென்ற பெயர் கொண்டு எம் மனங்கவர்ந்து நிற்கின்றது. புதுக்கவிதை என்பது வாழ்க்கையின் கண்ணாடி எனச் சொல்லாம். வாழ்வின் நிஜத்தை, சிக்கல்களை, எதிர்புகளை மற்றுமன்றி பொதுவுடமை, நாட்டுப்பற்று, தலித்தியம், பெண்ணியம் போன்ற சமூதாய அமைப்பு முறைகளை எடுத்தியம்பும் விம்பமாகவும் அமைகிறது.



மஹாகவி உருத்திரமூரத்தி

ஈழத்தில் மரபுக்கவிதைகள் பற்றியும் சரி புதுகவிதைகள் பற்றியும் சரி பேசும் போது கவிஞர் உருத்திரமூர்த்தி பற்றி குறிப்பிடாமல் போவது சுலபமல்ல. பாரததேசம் கொண்ட தமிழனுக்கு ஒரு மகாகவி போல ஈழதேசம் கண்ட மஹாகவியின் சில கவிதைகள் இன்று பார்ப்போம்

## மஹாகவி உருத்திரமூர்த்தி:

தமிழ்க் கவிதை இலக்கியத்திற்கு புது முகம் கொடுத்த தந்தை பாரதிக்குப் பின்னான காலத்தில் சுயம்புவான அடையாளங்களோடு மரபுக்கவிதையிலும், புதுக்கவிதையிலும் தன் மகத்துவத்தை நலைநிறுத்திக்கொண்டவர் கவிஞர் மஹாகவி. கவிஞர் புதுக்கவிதைகளை மட்டுமல்ல மரபுக் கவிதைகளையும் கையில் எடுத்தவர். அளவெட்டியைச் சேர்ந்த இவரது கவிதைகள் 1940களில் நாளேடுகளில் பிரசுரமாகத்தொடங்கின. கவிதைகள் மட்டுமல்லாமல் சிறுகதை, நாடகம் என்று பல துறையில் கால்பதித்தவர். மஹாகவி சமகால ஓட்டத்தினை இணங்கண்டு மரபுவழி நயத்திற்குப் பதிலாக பேச்சோசைத் தன்மையை புகுத்தியது மட்டுமல்லாது பாநாடகம், வில்லுப்பாட்டு ஆகிய துறைகளிலும் தனது முத்திரையைப் பதித்தவர்.

கவிஞர் மஹாகவி எழுதி பல நாடகங்களில் பாவிக்கப்பட்ட புகழ் பெற்ற ஒரு கவிதையினைப் பார்ப்போம். சிலநாட்களுக்கு முன் வேறு ஒரு சந்தர்பத்தில் எனக்கு அறிமுகமான இந்தப்பாடல் பல நேரங்களில் அடிக்கடி நினைவில் வந்து போவதாகவும் நான் முனுமுனுக்கும் வரிகளாகவும் ஆகிவிட்ட கவிதையென்றாகிப் போனது.

‘சிறு நண்டு மணல் மீது படம் ஒன்று கீறும்
சிலவேளை இதைவந்து
கடல் கொண்டு போகும்
கறிசோறு பொதியோடு தருகின்ற போதும்
கடல் மீதில் இவள் கொண்ட
பயம் ஒன்று காணும்
வெறுவான வெளிமீது மழைவந்து சீறும்
வெறிகொண்ட புயல்நின்று
கரகங்கள் ஆடும்
நெறிமாறு பட நூறு சுழிவந்து சூழும்
நிலையான தரைநீரில்
இலைபோல ஈடாடும்
இருளோடு வெளியேறி வலைவீசினாலும்
இயலாது தரவென்று கடல் கூறல் ஆகும்
ஒரு வேளை முகில் கீறி ஒளி வந்து வீழும்
ஒரு வேளை துயர் நீள
உயிர் வெந்து சாகும்’

இந்தப் பாடல்வரிகள் ‘புதியதோர்வீடு’ பாநாடகத்தில் இருந்து காணப்பெற்றவை.

இது போலவே ‘புதியதோர்வீடு’ நாடகம் முழுவதும் பேச்சோசைத் தமிழிலேயே கவிதை புனைந்தவர். கடலின் துணையோடு வாழும் மீனவர்களின் வாழ்நிலை கூறும் கவித்துவம் நிறைந்த இந்தக் கவிதை மரபுக்கவிதையின் இயல்பும், பாரதி சொன்ன எளிமைத் தமிழும் தெளிவாய் சீரான அலைகளாய் மீனவர்கள் வாழ்க்கைமுறை துயர்சுமந்து எம் கால் நனைத்துச் செல்வதை கவிதையினூடு உணரலாம்.

தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுள் ஒன்றான யாழ்நூலக எரிப்பு (1984) என்பது பலர் மனதில் அக்கினித் துண்டொன்றை விட்டெறிந்தது. அழிக்கப்பட்ட தமிழ்நூல்கள் ஈழத்தமிழ் இலக்கியங்கள் என்பன ஈடுஇணையற்றவை, அவைகளில் பல எவராலும் நாம் மீள்ப்பெற முடியாதவதை. இந்த யாழ்நூலக எரிப்பின் பின் சிலர் ஈழத்து இலக்கியப் படைப்பாளிகளின் கையெழுத்து பிரதிகளை பொறுக்கி எடுத்து மீண்டும் அச்சுவடிவாக்கினர். கவிஞர் மஹாகவி தான் வாழ்ந்த காலத்தில் சில நூல்களே அச்சுவடிவில் கண்டார். அவையாவன ‘வள்ளி 1955, குறும்பா 1966, ஒரு சாதாரண மனிதனது சரித்திரம் 1966 கண்மணியாள் கதை1968, கோடை1970” ஆகியனவாகும். எனினும் அவருடைய அனைத்துக் கவிதைகளும் நமக்கு இன்னும் எட்டவில்லை என்பது திண்ணம்.



கவிதா லட்சுமி
(நோர்வே)

சாலையோரங்களில் வைக்கப்படும் சுமைதாங்கிகள் பற்றியும் அது போல் ஒன்று ஆலயத்திலும் இருப்பது பற்றிய கேள்வியோடும் நகைச்சுவை உணர்வோடு கூடிய அவருடைய ஒரு கவிதை பேசுகிறது.

30 ஆம் பக்கம் பார்க்க...

‘சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஒய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்”



aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH
Dr. (h.c) Nageswaran Arulrasa D.Litt (CEO)
Eidgenössische finanzmarktaufsicht Nr.35302
Fachmann Für Versicherung & Vorsorge
Hauptstrasse 54, 6015 Luzern, Switzerland
079 8000 100 | arulnages@yahoo.com



finma : 34598 cicero : 25605

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# ஐரோப்பிய பட்மின்ரன் சாம்பியன் போட்டியில் யேர்மன் நாட்டிற்காக விளையாடும் தமிழர்!


துபிசன் பொன்னம்பலம்

ஐரோப்பிய பூப்பந்து (Badminton) சாம்பியன் போட்டியில் யேர்மன் தமிழர் ஒருவர் யேர்மன் நாட்டிற்காக விளையாட இருக்கிறார்! லிப்ஸ்ரட் (Lippstadt)ச் சேர்ந்த திரு துபிசன் பொன்னம்பலம் (Thupesan Ponampalam) என்பவரே இந்தச் சிறப்பிற்குரியவர்! மேற்படி போட்டிகள் எதிர்வரும் ஆவணிமாதம் 7ம்திகதி தொடக்கம்13ம் திகதிவரை ஸ்லோவீனியனில் (Slowenien)ல் நடைபெறும். இது இரட்டையர் பிரிவுப் போட்டியாகும். இவருடன் இணைந்து பீலபில்ட்டைச் (Bielefeld) ச் சேர்ந்த நடீன ரக்மெல் (Nadine Rahmel) என்ற பெண்ணும் விளையாடுகிறார்.

யேர்மன் நாட்டிலிருந்து எட்டுக் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன. இவர்கள் இருவரும் அதில் ஐந்தாவதாகத்தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. திரு துபிசன் பொன்னம்பலம் அவர்கள். மாணவப்பருவத்தில் இருந்தே ஆர்வத்துடன் விளையாடி வருகிறார்.


பொன். புத்திசிகாமணி (யேர்மனி)

பத்திரிகைகளில் இவர் படம் தாங்கிய செய்திகள் அநேகமாக வருவதுண்டு. உலகத் தமிழ்ப் பூப்பந்து அமைப்பில் இணைந்து தொடர்ந்து விளையாடி வருகிறார். மேற்படி அமைப்பு. பல வருடங்களாக திறமைகளைத் தெரிவு செய்து போட்டிகளை நடாத்தி வருகிறது.லண்டன்,பிரான்ஸ்,சுவிஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளில் விளையாடி பலரின் பாராட்டைப் பெற்றவர்.இன்னும் பெற்று வருகிறார்.

BADMINTON EUROPE

யேர்மன் நாட்டிற்காக அவர் விளையாட இருப்பது ஒரு வரலாற்றுச் சாதனையாகும். இவர் வாழும் நாட்டிற்கும் இந்தப் பெருமையுண்டு. இதைவிடுத்து பிறப்பால் இலங்கைத் தமிழர் என்ற பெருமையும் சேருகிறது. திரு துபிசன் அவர்களின் இடைவிடாத பயிற்சியின் பலன் இவரை இந்த நிலைக்கு உயர்த்தி இருக்கிறது. புலம்பெயர் தேசங்களில் வாழும் நம்ம வர்கள் பலர்,பல துறைகளிலும் முன்னேறி வருவதை அறிந்து வருகிறோம். மேற்படி போட்டியில் சிறப்புற விளையாடி வெற்றி கொள்ள நாமும் வாழ்த்துவோம்.

---

08 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## அன்று தமிழ் மக்களுக்கான அரசின் தடை...

தெரிஞ்சாத் தான் மோட்டச்சைக்கிள் ஓடலாம். பற்றிரிக்கு எதிர்ப்பக்கத்து box இல பழைய பிளக்குகள், சைக்கிள் brake வ்டை பழைய cable கம்பி, தேஞ்ச வால் பிளேட், நெருப்புப் பெட்டி பழைய துணி எல்லாம் இருக்கும், இடைக்கிடை ஓடிற மோட்டச்சைக்கிள் அடிக்கடி நிண்டா இதுகள் தேவை.

பிளக்கை மாத்தினாச்சரி எண்டு தொடங்கி Timing chain அடிக்குது, ஒயில் சீல் சரியில்லை,காஸ்கெட் மாத்தோணும், lathe இல கொண்டு போய் boring செய்யோணும், oil rings சரியில்லை எண்டு போய் கடை சீல பிரிச்சுத் தான் செய்யோணும் எண்டு மோட்டச்சைக்கிளைப் பற்றி முழு அறிவும் கிடைக்கும்.

தடை அமுலாக்கத்தின்டை உச்சத்தில வந்த கஸ்டத்தில கன கண்டுபிடிப்புகள் ஊரில வந்திச்சிது. அதிலையும் மண்ணெண்ணை மோட்டச்சைக்கிள் modification காலத்தின் கண்டுபிடிப்பு. Saline tube ஐ எடுத்து காத்துப்போற கறுப்பு air hose இல ஓட்டை போட்டு அதைக் கொண்டு போய் carburetor இல கூடப் பெற்றோல் வந்தா இருக்கிற overflow ஓட்டைக்குள்ள செருகி வெளியடைற வரஏற இல ஒரு sy ringe கவிட்டு செருகிறது தான் modification இன்டை முதல் படி. அங்கங்க இருக்கிற மினி பெற்றோல் ஸ்டெசனில பாதி வெட்டின பரலில மண்ணெண்ணை, கொஞ்சம் போத்திலில பெற்றோல், can இல ஒயில், singer oil குப்பி\சூப்பி எல்லாம் விக்க இருக்கும். அப்ப மண்ணெண்ணை வியாபாரிகள் தான் பெரிய கடை முதலாளிகள்.

ஒவ்வொரு அங்குலம் ராணுவம் பின் வாங்க அடிக்கிற ஒவ்வொரு அடிக்கும் விலைகளும் சாமாங்கள் தடைகளும் கூடும். கடலில கப்பல் அடிச்சா கடைக்காரர் எல்லாம் சந்தோசத்தில கடையை மூடினவங்கள் எண்டு நாங்கள் நம்பினம். ஆனால் பாத்தா ரெண்டாம் நாள் கன சாமாங்கள் மூண்டு மடங்கு விலை கூடி இருக்கும். Talk of the town கைப்பற்றின ஆயுதங்களாக இருக்கிற பயி இல ஏறின விலைகள் கவனிக்கபடாமல் போயிடும். இதைத்தான் பிறகு இலங்கை அரசாங்கமும் பாத்து cricket match நடக்கேக்க தான் பல விலையேற்றங்களை செய்யவும், தரை இறக்கங்கள் பற்றிய நிலவரத்தை வெளியிடவும் தொடங்கினது.

பெற்றோல் குப்பியை \ சூப்பியை வைக்கிறதுக்கு அருகில ஒரு வெட்டின பிளாஸ்டிக் போத்திலை fix பண்ணி அதுக்குள்ள தான் வைக்கிறது. பிறேக் கேபிளில கட்டி இருக்கிற சேலைன் ரியூபை எடுத்து போலியோ மருந்து மாதிரி மூண்டு சொட்டு மட்டும் விட்டிட்டு வாயால காத்தடிக்கிற மாதிரி மூலம் தள்ளிற அளவுக்கு ஊதினபடி கிக்கரை உதைக்கத்தொடங்கி ஒரு பத்து தரம் உதைக்கவிட்டு ஒருக்கா கேக்கிற இஞ்சின் சத்தம் மூண்டு மாதம் பின்னால சுத்தின பெட்டை ஒருக்கா திரும்பிப் பாக்கேக்க வாற அதே நம்பிக்கையைத் தரும். எப்பிடியும் start பண்ணிடலாம் எண்டு தொடர்ந்து முயற்சித்தால் அது பெட்டையோ மோட்டச்சைக்கிளோ முயற்சி திருவினையாக்கும்.

Accelerator ஐயும் chalk ஐயும் அளவாப்பிடிச்சு முறுக்க சைலன்சர் அடைச்சு வெடிச்சு காபன் பறக்க இன்னும் கூட முறுக்க இஞ்சின் கொஞ்சம் நிதானத்துக்கு வரும். மிச்சப் பெற்றோல் இருந்தாலும் எண்டு இன்னும் ஒருக்கா சேலைன் ரியூபை ஊதிவிட்டுத் தான் ஓடத்தொடங்கிறது. அப்ப ஒருக்கா start பண்ணிற வாகனங்களின்டை இஞ்சினை நிப்பாட்டிறேல்லை ஏனெண்டால் முழு நாள் ஓடிற மண்ணெண்ணைச் செலவு மூண்டு சொட்டிலும் பாக்க குறைவு எண்ட படியாத் தான். அதோட நிப்பாட்டீட்டு இறங்கிப் போகேக்க மறக்காம துறப்பைக் கழட்டி அதோட குப்பியை எடுத்து பொக்கற்றுக்க வைச்சிடுவினம். பெற்றோல் குப்பி \ சூப்பி வைச்சிருக்கிற ஆக்கள் அதை றொலக்ஸ் மணிக்கூடு மாதிரி பெருமையா கொண்டு திரிவினம். அதின்டை பெறுமதி தெரிஞ்சு.

என்னதான் start வராட்டியும் மூண்டு சொட்டுக்கு மேல பெற்றோல் விடுறேல்லை. அடிச்சு அடிச்சே பிளக்கை சூடாக்கிறது இல்லாட்டு பிளக்கை கழட்டி நெருப்பில பிடிச்சிட்டு திரும்பியும் start பண்ணிறது.

“செருப்புக்கிழியும்வரைஉதை,கால்தேயும் வரை உதை,கிக்கர் உடையும் வரை உதை “ எண்ட தாரக மந்திரத்தோட தான் ஒவ்வொரு நாளும்காலமைதொடங்கும்எண்டாலும்start பண்ணீட்டு கப்பலோட்டிய பரம்பரை எண்ட பொருமையோட மோட்டச்சைக்கிளையும் நாங்கள் ஓடித்திரியறது.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# நிழல் படக்காரிகையின் பேசும் படங்கள்!



செல்லும் இடங்களில் நல்ல காட்சிகளைக் கண்டால் படம் எடுப்பது ஒரு கலை. நல்ல இடங்களைத் தேடித் தேடி, காலம் நேரம் பாராது, காத்திரு ந்து தனக்கு விரும்பிய காட்சி வரும் வரை, பொறுமை காத்து, படம் பிடிப்பது இவளது குணம். இப்படி இவள் பிடிக்கும் படங்கள் பிடித்துப்போகவே வெற்றிமணியில் பதிவிட முன்வந்தேன். இனி கீதாவுடனும்,அவள் படங்களுடனும் பேசுங்கள். ஆசிரியர்.



**கீதா ரவி**
**(நோர்வே)**

நோர்வே நாட்டில் இங்கே Goksjø எனும் இடத்தில் சித்திரை மாதத்தில் மீன்பிடி கழுகுகள் வரும். இது ஆங்கிலத்தில் முளிசநல என்றும் நோர்வே மொழியில் fiskeørn என்றும் அழைக்கப்படும். காமரா க்ளப் நண்பர் இரு வாரங்களுக்கு முன்பு போகலாமா என்று கேட்டார். இருவரும் சென்றோம். அன்று அவை வரவில்லை. ஏமாற்றத்துடன் திரும்பினோம். மீண்டும் இன்னுமொரு நாள் காலை நான் மட்டும் 8.30 க்கு போய் இரவு 20.00 மணிக்கு திரும்பி வந்தேன். அன்று வானத்தில் பறக்கும் போது எடுத்தேன். அது மீன் பிடிப்பதற்கு தயாராகும் போது வானில் ஒரே இடத்தில் இருந்து சிறகடிக்கும். பின் குத்தென நீரில் மூழ்கி மீன் பிடிக்கும். அப்படி நீரில் மூழ்கி மீன் பிடிக்கும் போது முன்னே நாணற்புற்கள் தடையாக இருந்ததன. சில படங்கள் நாணற்புற்கள் ஊடாக எடுத்தேன். அது ஒரு கலைவடிவம் பெற்றது.

மனம் திருப்தியடையவில்லை. மீண்டும் மூன்று நாட்கள் கழித்து காலை 6.00 மணிக்கு போனேன். நல்ல குளிராக இருந்தது. காலைப்பொழுது அவ்வளவு ரம்மியமாக இருந்தது. கழுகு 11 மணிக்கு பிறகு வந்து எட்டிப் பார்த்துவிட்டு மீன் பிடிக்கவில்லை சென்று விட்டது. எனக்கு தூரமாகத் தான் அவை மீன் பிடித்தன... காத்திருப்பு மிக மிக அவசியம்..

சக்கரநாற்காலி போகக்கூடிய இடங்களில் நான் மாற்றி மாற்றி நின்றேன். கண்களை மூடிக் காட்சியைக் கற்பனை செய்தேன்.கடவுளிடம் மனசார வேண்டினேன். கடவுளே இந்த இடத்தில் மீன் பிடிக்க வேண்டும் என்று. ஆச்சரியம் காத்திருப்புக்கு பின் அதே இடத்தில் வந்து மீன் பிடித்தது. ஆனால் அது வெற்றி பெறவில்லை. மீன் தப்பிவிட்டது. என்னவோ தெரியவில்லை படப்பிடிப்பு விடயத்தில் மட்டும் கடவுள் நிறைய தடவை வேண்டுதல் நிறைவேற்றி இருக்கிறார் அவருக்கு நன்றி சொன்னேன்.மீனுடன் பறந்து செல்லும் படங்கள் நான்காவது தரம் போன போது எடுத்தேன்.


( Photos: © Geetha Rasalingam)

இயற்கையை கையில் பிடித்துப் பார்க்க ஆசை.

# அன்னப்பட்சிகள் காதல்



அவற்றின் தனிப்பட்ட
வாழ்வை எட்டிப்பார்த்ததுக்கு
மன்னிப்புக் கோரிவிட்டு...
அன்னப்பட்சிகளின் மென்காதல்
சொல்கிறேன் கேளுங்கள்...
முதலில் தலையுடன் தலை சேர்த்து
ஈரிதயம் இணைந்த ஓரிதயம் என
செயலில் ஓவியம் வரைந்தன...
அதுவொரு நளினமான இனிய
காணற் கவிதையாய் இருந்தது...
தூய வெண்மை உடல்களில்
நீர்த்திவலைகள் முத்துக்களாய்
ஒட்டாமல் உருண்டன...
சொர்க்கங்கள் இறப்பின் பின்தான்
காணவேண்டுமென்பதில்லை...
முத்தம் இட்டுப் பின் நீரினுள்ளே தன்
காதல்தேவதையை அமிழ்த்தி
முதுகிலமர்ந்து முத்தமிட்டபடியே
காதற்கலவியில் கலந்த பின்
தேவை தீர்ந்தது என ஓடவில்லை
அந்தக் கம்பீர ஆண்தேவதை...
சிறிது வெட்கம் சிறிது நளினம்
சூடிய தன் இணையை



மீண்டும் குனிந்து முத்தமிடல்
நெஞ்சோடு அணைத்தல்
அன்பொழுகப் பார்த்தல் என
சில நிமிடங்கள் தொடர்ந்த பின்
சற்று விலகிச் சென்றது...
பெண் தேவதை
பல நிமிடங்களாக நீரில் முங்கிக்
குளித்து தன்னுடலை
சுத்தப்படுத்தி
தன் வெண்ணிறக்கைகளை
அசைத்தும்
கோதியும் உலர்த்தியது...
இரண்டும் இணைந்து நீரில்
மிதந்து மிதந்து



தூரத்துப் புள்ளிகளாகின...
கவிதையாய் காதல் செய்கவென
இயற்கை சொல்லும் பாடங்கள்...
ஒளிப்படைப்பாளினியாகவும்
இயற்கை நேசிப்பாளினியாகவும்
கவித்துவ மனமுடையாளாகவும்
ஊர்பவை , நடப்பவை, பறப்பவை
வாழ்க்கையில் எட்டிப்பார்க்கும்
அத்துமீறல்கள் தொடரும்...
அவை யாவும் எனை மன்னிக்குக...

**கீர்த்தனா ( கீதா ரவி )**
**07.04.2022.**
**ஒளிப்படம் : கீதா ரவி**

பண்ணாகம்.கொம் இணையத்தின் Pannagam.com

உலகளாவிய தமிழ்ப் பாடல் எழுதும் மாபெரும் போட்டி

பாடல் எழுதும் போட்டி நிபந்தனைகள்

1. இப்போட்டிக்கு வயதெல்லை கிடையாது யாவரும் கலந்து கொள்ளலாம்.
2. பாடல் வரிகள் குறைந்தது 14 வரிகளும் கூடியது 24 வரிகளும் அமையும்படி எழுதவேண்டும்
3. இப் போட்டிக்காக எழுதும்பாடல் சொந்தப்படைப்பு என உறுதிக்கடிதம் இணைக்கவேண்டும்.
4. நாட்டார் பாடல்,பக்திப்பாடல்,காதல் பாடல்,சமூகப்பாடல்களாக அமையலாம். ஒருவர் விரும்பினால் 3 பாடல்கள் எழுதலாம்.
5. அரசியல்,அமைப்புகள், சாதியம், தனிநபர்சாடல்கள் இல்லாமல் சமூகத்திற்கு ஏற்றவையா வேண்டும்.
6. சிறந்த பாடல்கள் இசை அமைப்பாளர்களால் இசைப்பேளைகளாக உருவாக்கப்படும்.
7. அதிசிறந்த பாடல்களுக்கு சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கப்படும்.
8. நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது. பல நாடுகளிலிருந்து நடுநிலை செய்வார்கள்.
9. நிபந்தனைகளுக்கு அமையாத பாடல்களை நிராகரிக்க பண்ணாகம்.கொம் இணையத்திற்கு உரிமையுண்டு.
10. பாடல்களை 30.9.2022 க்கு முன்னார் PDF வடிவில் கிடைக்கக்கூடியதாக மின்னஞ்சலில் அனுப்பவும்.

pannagam@live.com , ekk.moorthy@gmx.de

மேலதிக தொடர்புகளுக்கு:
www.Pannagam.com
Germany
TP,WhtsApp: 0049 173707149
Email : pannagam@live.com,
ekk.moorthy@gmx.de

அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (பண்ணாகம்.கொம் நிர்வாகம்)

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# மலையக இலக்கியம் எழுச்சி பெற்றுள்ளது!

## லண்டன் மலையக இலக்கிய மாநாட்டில் உரை!







"இலங்கை என்றதும் தேயிலை என்றும், தேயிலை என்ற தும் தேயிலைத்தோட்டத் தொழிலாளர்கள் என்றும் அறியப்பட்ட காலம் இருந்தது. 1970 களில் தேயி லைத் தோட்டத் தொழிலாளர்களின் அவல நிலை பற்றி மனித உரிமை இயக்கங்களும் தொலைக்காட்சி ஊடகங்களும் உலக அரங்கில் எடுத் துப்பேசின. எண்பதுகளின் பின்னர் வட புலத்தில் விடுதலைப்போராட்டம் ஆயுதப்போராட்டமாக க்கிளர்ந்த போது, மலையக மக்களின் பிரச்னைகள் பின்தள்ளப்பட்டன. இன்று மலையக மக்களின் பிரச்னைகளை உலகின்முன் வைக்கும் தேவை எழுந்துள்ளது' என்று மலையக ஆய்வாளர் மு.நித்தியானந்தன் சென்ற சனிக்கிழமை(13.6.2022) லண்டனில் நடைபெற்ற மலையக இலக்கிய மாநாட்டில் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

"அறுபதுகளுக்குப்பின் மலையகத்தில் எழுந்த இலக்கிய அலைக்குப் பின்னர் மலையக இலக்கியம் வேகம் பெறத்தொடங்கியது. சிறுகதை,கவிதை,நாவல்,வரலாறு,அரசியல்,பொருளாதாரம்,மானிடவியல் ஆய்வு, மலையகத் தலைவர்களின் வரலாறு என்று பன்னூற்றுக் க்கணக்கான நூல்கள் மலையகத்திலிருந்து எழுந்துள்ளன' என்று அவர் மேலும் பேசுகையில் அவர் குறிப்பிட்டார்.

ஏழு அமர்வுகளாக இடம்பெற்ற இம்மாநாட்டில் காத்தாயி என்ற மலையகத் தியா-கப் பெண்மணியின் நினைவரங்கில்


மு. நித்தியானந்தன்


கே.கே. ராஜா

லண்டன் - மலையகமாநாடு 2022 வெற்றியின் பின்நின்று உழைத்த மலையகமைந்தன் மு.நித்தியானந்தனும், மாநாட்டை சாத்தியமாக்கித் தந்த விம்பம் ஸ்தபக உறுப்பினருள் முக்கியமான ஓவியர் கே.கே.ராஜாவும்

'மலைகளைப் பேசவிடுங்கள்' என்ற நூல் குறித்து ந.சரவணன் (நோர்வே) என்ற ஆய்வாளரும், 'வெந்து தணியாத காடு' என்ற நூல் பற்றி எம்.பௌசரும் 'வண்ணச் சிறகுகள்' கவிதைத்தொகுதி பற்றி சுகன் (பாரிஸ்) என்ற கவிஞரும் உரையாற்றினர்.

வழக்கறிஞர் செல்லத்தம்பி சிறிக்கந்தராசா தலைமையில் ஆரம்பமான இர.சிவலிங்கம் நினைவரங்கில் 'கூலித்தமிழ்' பற்றி தோழர் ச.வேலு அவர்களும், '21 ஆம் நூற்றாண்டில் மலையகத் தமிழர் எதிர்நோக்கும் சவால்கள்' பற்றி கரவைதாசன் (டென்மார்க்) ஆகியோர் ஆய்வு செய்தனர். மைத்ரி ஜெகதீசனின் Tea and Solidarity என்ற ஆய்வு நூலை ராகவன் அறிமுகம் செய்து வைத்தார்.

மீனாள் நித்தியானந்தனின் தலைமையில் இடம்பெற்ற கோகிலம் சுப்பையா நினைவரங்கில், எஸ்தரின் 'பெரு வெடிப்பு மலைகள்' கவிதைத் தொகுதியினை நவஜோதி ஜோகரட்னமும், பதுளை சேனாதிராஜாவின்'குதிரைகளும் பறக்கும்' நூலினை பூங்கோதையும், பிரமீளா பிரதீபனின் 'விரும்பித் தொலையும் காடு' நூலினை மாதவி சிவலீலனும் அறி முகம் செய்து வைத்துப்பேசினார்கள்.

க.ஆதவன் (டென்மார்க்) தலைமையில் நடைபெற்ற சோ.சந்திரசேகரம் நினைவரங்கில் யோகேஸ்வரி விஜயபாலன் எழுதிய End less Inequality என்ற சட்ட ஆய்வுநூலை டாக்டர் எஸ்.தம்பிராஜாவும் எம்.வாமதேவன் எழுதிய 'நீங்காத நினைவுகளில்...' என்ற நூலினை இர.ராமலிங்கமும் தமிழகன் தொகுத்த 'மலையகமும் மறுவாழ்வும்' என்ற நூலினை பெரி சிவஞானமும் அறிமுகம் செய்தனர்.வி.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற சி.வி.வேலுப்பிள்ளை அரங்கில் இரா.சடகோபன் மொழிபெயர்த்த 'தேத்தண்ணி' நாவலை ப.சந்தோஷ் ஆய்வு செய்தார்.

சி.வி.வேலுப்பிள்ளை எழுதிய 'மலையக அரசியல்: தலைவர்களும் தள பதிகளும்' என்ற அரசியல் நூலை மு.நித்தியானந்தன் வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்தினார்.

மாதவி சிவலீலன் தலைமையில் நடந்த தமிழோவியன் அரங்கில் மு.சிவலிங்கம் எழுதிய 'மழைக்காலத்து வெயில்' என்ற சிறுகதைத்தொகுப்பை ■

27 ஆம் பக்கம் பார்க்க...

தாயகத்தில்... வவுனியாவில் அமைந்துள்ள
"பண்டாரவன்னியன் புத்தகசாலையில்"
ஈழத்துப் புத்தகங்களை நீங்கள் பெறமுடியும்.

பண்டாரவன்னியன் புத்தகசாலை

தொடர்புகளுக்கு:-
பண்டாரவன்னியன் புத்தகசாலை
இல., 113 பாடசாலை வீதி,
பண்டாரிகுளம், வவுனியா, இலங்கை
+94772244616

இது வெற்றிமணியின்
ஒரு இலவச விளம்பரம்.
நம் இளஞர்கள்
முயற்சிக்கு
கைகொடுப்போம்!

# லண்டன் மலையக இலக்கிய மாநாடு



மாதவி சிவலீலன் - நவஜோதி யோகரட்ணம் - மீனாள் நித்தியானந்தன் - அஞ்சனா

கோகிலம் சுப்பையா அரங்கு



எம்.என்.எம். அனஸ் பால சுகுமார் நா. சபேசன் கோகுலரூபன்

சாரல்நாடன் அரங்கு



இர. இராமலிங்கம் க. ஆதவன் டாக்ரர் எஸ். தம்பிராஜா

சோ.சந்திரசேகரம் அரங்கு



மு.நித்தியானந்தன் பரா.சந்தூரஷ் வி.சிவலிங்கம் மாதினி சிறிக்கந்தராசா

சி.வி.வேலுப்பிள்ளை அரங்கு

26 ஆம் பக்கத் தொடர்ச்சி...

மீனாள் நித்தியானந்த னும், மாத்தளை சோமுவின் 'கண்டிச் சீமையில்' என்ற நாவலை பாரதி சிவராஜாவும்,மலரன் பனின் 'பால்வ னங்களில்' என்ற நாவலை அஞ்சனாவும் அறிமுகம் செய்துவை த்தனர்.

நா.சபேசன் தலைமையில் நடந்த சாரல்நாடன் அரங்கில் அல் அஸ்மத் எழுதிய 'அறுவடைக்கனவுகள்' நாவலை எம்.என்.எம்.அனஸ் அவர்களும் புதுக் கோட்டை தங்கவேல் எழுதிய 'கறிவேப் பிலைகள்' நூலை மாதவி சிவலீலனும் அறிமுகம் செய்துவை த்துப்பேசினர்.

மெய்வெளி நாடக அரங்கின் சார்பில் சாம் பிரதீபனின் 'காத்தாயி காதை' என்ற நாடகமும் அரங்கேறியது.

அரங்கத் தலைமைகளை நவரட் னராணி அறிமுகம் செய்து வைக்க, விம்பத்தின் சார்பில் ஓவியர் கே.கே.ராஜா மாநாட்டு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து வழங்கினார்.



பாரதி சிவராஜா மீனாள் நித்தியானந்தன் மாதவி சிவலீலன் பூங்கோதை



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## தமிழர்களின் பாரம்பரிய உணவும்...

ஆதாரங்கள் எல்லாமே இருக்கிறது. இன்று ஒரு வீட்டில் களி கிண்டக் கூடிய தன்மை இருக்கிறதா? அன்றைய கால கட்டத்தில் நல்ல உடல் வன்மைக்கும், உடல் வலுவுக்கும், தமிழர்கள் சாப்பிட்ட உணவு களி .காலை வேலையில் தோட்ட வேலைக் குப் போகக்கூடிய தமிழர்கள் வெந்தயக் களி, உளுத்தங்களி, கேழ்வரகுக் களி, சோளக்களி, கம்புக்களி உண்டு வந்தனர். களி என்பது திடப்பொருள் உணவாகும். இந்த மாதிரியான களியை உட்கொண்டு தோட்டத்திற்கு செல்லும்போது அவர்களால் கடுமையான வேலைகளைக் கூட செய்ய முடிந்தது.

ஊட்டத்திறன், உண்டாற்றல், உந்துசக்தி எல்லாமே அந்த உணவில் கிடைத் ததால் அவர்கள் செய்த வேலை என்பது மிகச்சிறந்த பயிற்சியாக அங்கீகரிக்கப்பட்டு உடலோம்பலும், அதன் மூலம் அற்புத மான ஆரோக்கியமும் அவர்களுக்குக் கிடைத்தது. ஆனால் இன்றைய காலகட்டத் தில் தமிழர்கள் எடுக்கக்கூடிய உணவுகள் அநேகமாக இட்லி, தோசை. இந்த இட்லி, தோசை என்பது அரிசியை புளிக்க வைத்து, அதாவது அரிசியை மாவாக்கி புளிக்க வைத்து, அந்த புளிப்புத்தன்மை மிகுதியான பின்புதான் இட்லியாகவோ, தோசையாகவோ வார்க்க முடியும். அதைச் சாப்பிட்டு வேலைக்குப் சென்றோமானால் உடம்பு இன்னும் கூடுதலாக புளிக்க ஆரம்பிக்கிறது. ஆக புளிப்பு உணவுகளை தெரிந்தோ, தெரியாமலோ, மறைமுக மாகவோ நாம் தொடர்ந்து எடுக்கக் கூடிய ஒரு காலகட்டத்தில் உடம்பு தன்னுடைய ஊட்டத்திறனை முழுமையாக இழந்து உடலிலும் புளிப்புத் தன்மை மிகுந்து பல்வேறு நோய்கள் வருகிறது. இட்லி, தோசை என்று இருந்த தமிழ் சமூகம் இன்று வேறு ஒரு உணவை உண்ணும் நிலை மைக்குச் சென்று கொண்டிருக்கிறோம். இன்ஸ்டன்ட் நூடில்ஸ், சப்பாத்தி, பரோட்டா, பிரியாணி போன்றவற்றை உட்கொண்டு வாழும் சூழலுக்கு தள்ளப்பட்டிருக்கிறோம். உலகம் முழுக்க உணவுப் பொருள்களில் ஒரு லட்சம் செயற்கை ரசாயனம் இருப் பதாக மதிப்பீடு செய்து இருக்கிறார்கள். இவை உலகம் முழுக்க இருக்கின்ற தோ இல்லையோ, ஆனால் கீழைத் தேய நாடுகளுக்கு வரக்கூடிய உணவுப் பொருள்களில் கட்டாயம் இருக்கிறது. அந்த மாதிரியான ரசாயனம் கலந்த உணவுக ளைச் சாப்பிடும்பொழுது தமிழர்களுடைய உணர்வு மழுங்கடிக்கப்படும்.

இன்று பெரும்பாலான நோயாளிகள் ஏதாவது ஒரு மருத்துவரிடம் வாழ் நாள் முழுக்க அடிமை சாசனம் எழுதிக் கொடுக்கிற ஒரு காலகட்டம் வளரும் நாடு களில் உருவாக்கப்பட்டுள்ளது. அதை உடைக்க வேண்டும் என்றால் ஒவ்வொ ருவரும் தன்னுடைய உணவுமுறை, பாரம்பரியம், கலாசாரம் போன்றவற் றின் அடிப்படையில் முன்னோர்கள் என்ன உணவு முறையில் சாப்பிட்டார்கள், எப்படி ஆரோக்கியமாக இருந்தார்கள், எப்படி அவர்கள் மட்டும் பல குழந்தைகளைப் பெற்று வளர்த்து ஆரோக்கியமாக இருந்தா ர்கள்? எப்படி அவர்களால் மட்டும் நோயின்றி வாழமுடிந்தது ஏன் இன்று நம்மால் இயலவில்லை? எப்படி மரபுக் கூறுகள் மழுங்கடிக்கப்பட்டன? என்பதை உற்று நோக்கி ஆய்ந்து பார்க்க வேண்டும். அன் றைய தமிழர்கள் வாழ்க்கையிலே கடுகோதன னம் என்ற சாப்பாட்டு முறையே இருந்தது.

கடுகோதன்னம் என்றால் கடுகை பிரதா னப்படுத்தி அரிசியுடன் சேர்த்து சமைக் கக்கூடிய ஒரு முறை. உளுந்தோதன்னம் என்பது உளுந்தையும், அரிசியையும் வைத்துச் சமைக்கக்கூடிய ஒரு முறை, எள்ளோதன்னம் என்றால் எள்ளையும், அரிசியையும் வைத்து சமைக்கக்கூடிய ஒரு முறை. ஆக இந்த முறையெல்லாம் முன்பு வாழ்ந்த தமிழர்களிடம் இருந்தது.

எள்ளுச்சோறு, கொள்ளுச்சோறு, கடுகுச்சோறு இவையெல்லாம் இருந்த தமிழ் சமூகத்தில் ஹார்மோனல் பிரச்சனை இன்று உலகளாவிய அளவில் பேசப்படுகிற தைராய்ட் பிரச்சனை எல்லாவற்றுக்குமே சோறே மருந்தாக மாறியது. ஏன் அப்படி ஒரு காலகட்டத்தை நாம் உருவாக்கக் கூடாது. இதை தமிழ் சமூகம் சிந்திக்க வேண்டும். நம்முடைய புராதன, பாரம்பரிய உணவு முறைகளை நாம் ஒவ்வொருவரும் நினைத்து, மறுபடியும் மீட்டெடுத்து மறைந்துவிட்ட உணவுப் பொருள்களை அடையாளப்படுத்தவேண்டிய பாரிய பொறுப்பு நம் அனைவர்க்கும் உண்டு! ■

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## இங்கிலாந்து அரச சட்டப்பேரவையில்...

இம்மாதம் நீல் பரிஷ் அவர்களின் தொலை பேசி விவகாரத்தால் பிரிட்டிஷ் நாடாளு மன்றம் அதிர்ச்சிக் குலுக்கல் குலுங்கி நிற்க முன்னரே மற்றோர் பாலியல் விவகா ரம் அம்பலமாகியது. பிரிட்டனில் புதன்கி ழமை தோறும் 3.00 மணிக்கு பிரதமரின் கேள்விநேரம் (P.M's Question Time) நடக்கும். நாடாளுமன்றத்தில் மக்கள் கூட்டம் அலைமோதும். உறுப்பினர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு பிரதமர் ஜோன்சன் எழுந்து நின்று பதிலளிப்பார். பிரிட்டிஷ் நாடாளுமன்றில் கூட்டம் நடக்கும் படத்தைப் பாருங்கள். இலங்கை நாடாளுமன்றம், சென்னை சட்டமன்றம் ஆகியவற்றில் காணப்படுவதுபோல, பிரிட்டிஷ் நாடாளும ன்றில் எந்தவொரு M.P க்கும் மேஜை கிடையாது. குறிப்பாக முன்வரிசையில் அமர்ந்திருக்கும் உறுப்பினர்கள், குறிப்பாக பெண் M.Pக்கள் தமது கால்களை எங்கே, எப்படி வைக்கிறார்கள் என்பது கடந்தவாரம் சர்ச்சையாக மாறியது.

பிரதமர் ஜோன்சன் அரசாங்க தரப்பில் எழுந்து நின்று Despatch Boxஇல் நின்று கேள்விகளுக்கு பதிலளித்துக்கொண்டிரு ந்தார். அந்த சமயத்தில் எதிர்க்கட்சியின் மூத்த தலைவியுபெடிய சுயலநெச ஆளும் கட்சிக்கு எதிர்தரப்பில் உள்ள ஆசனங் களில், பிரதமர் ஜோன்சனுக்கு நேர் எதிராக குட்டைப் பாவாடை அணிந்து அமர்ந்தபடி தனது இடதுகாலின் மேல் வலதுகாலை போடுவதும், பின்னர் கால்களை மாற்றி, வலது கால்மீது இடதுகாலை போடுவதுமாக இருந்தாராம். நடிகை சிலுக்கு சிமித்தா போன்ற தோற்றம்கொண்ட Angelaவின் 'கால் மாறி ஆடும்' திருவிளையாடலை பிரதமர் கவனித்தாரோ இல்லையோ, ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலர் கவனித்தார்கள். தங்கள் தலைவர் பிரதமர் ஜோன்சனின் கவனத்தை சிதறடிக்கவே எதிர்க்கட்சி அம்மணி முன்வரிசையில் அமர்ந்து இந்த திருகுதாளத்தை அரங் கேற்றினார் என்று ஆளும் கட்சியினரும், அவர்களது ஊதுகுழல் பத்திரிகையான Sunday Mail உம் காரசாரமான கோபத் துடன் எழுதியிருந்தன. தன்னைப் பற்றிய இந்த விரசமான கருத்துக்களுக்கு Angela பதிலளித்து கருத்து வெளியிடும்போது "பிரதமர் ஜோன்சனின் கருத்துக்களுக்கு நேரடியாக பதிலளிக்கும் ஆற்றல் எனக்கு இருக்கவே இருக்கிறது. அதற்காக 'அதை இதைக்காட்டி' அவரது கருத்தை திசை திருப்பவேண்டிய அவசியமே எனக்கு இல்லை!" என்று குறிப்பிட்டார்.

ஒட்டு மொத்தத்தில் தொழிற்கட்சி Angela வுக்கும் Oxfordஇல் படித்த பிரதமர் ஜோன சனுக்கும் இடையில் கன்சவேடிவ் கட்சியின ரும் ஊடகங்களும் மூட்டிவிட முற்படும் தீ, வெறும் Working Class Angela வுக்கும் மாடி வீட்டு வர்க்கத்தினருக்கும் இடையி லான ஒரு வர்க்கப் போராட்டம் என்றுதான் சொல்லவேண்டும்.

வெளி உலகத்திற்கு என்னவோ தாங்கள் பெண்களை உயர்ந்த அந்தஸ்தில் வைத்து மதிப்பதாகத்தான் பிரிட்டிஷாரைப்பற்றி ஒரு கருத்து நிலவுகிறது. ஆனால் உண்மை யில் இந்திய மத்திய கிழக்கு நாடுகளைப் போல, 'ஷேக்' மன்னராட்சி நாடுகள் போலத் தான் இங்கும் ஆணாதிக்க அடக்குமுறை காணப்படுகிறது. மற்ற நாடுகளில் ஆணாதி க்கவாதிகள் பெரும்பான்மையினராக இருக்கலாம். இங்கு பிரிட்டனில் பெண்களை அடிமையாக துன்புறுத்தும் ஆணாதிக்கவாதி கள் சிறுபான்மையினரோ என்னவோ இருக்கவே இருக்கிறார்கள்.

ஆங்கில மக்களின் விவாகரத்து வழக்குகளில் கணவன் நடந்துகொள்ளும் முறை வழக்கறிஞர்களுக்கும் நீதிபதிக்கும் ஒரேமுடிவை எடுக்கும்படிதான் இருக்கும். அதாவது காதலித்து (ஆங்கில மக்கள் பேசித் திருமணம் செய்வதில்லை) செய்யும் திருமணங்களே எல்லாம்! முதற்பிள்ளை பிறக்கும்வரை சுமுகமாக இருந்துவிட்டு, இரண்டாம் குழந்தை கர்ப்பத்தில் உருவான தும் "உன்னுடைய தோழர்கள் ரகு, ராஜ், சிவா, குமார் எனக்குப் பிடிக்கவில்லை. அதேபோல உன் தோழியர் சுமித்திரா, சுகுனா, ஜெனி எனக்குப் பிடிக்காதவர்கள். இந்த ஏழுபேரையும் நீநிரந்தரமாக துண்டிக்க வேண்டும்" என்று கட்டாயத் தடை விதிக்கும் கணவரை Psycho என்று கூறாமல், வேறு எப்படி சொல்வது?

இந்த Psycho கணவர்களின் உடன் பிறப் புகள் பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தேர்தலில் வென்று அங்கு போனால், அங்குள்ள பெண் M.P க்கள், இளம் பெண் பத்திரி கையாளர்கள் ஆகியோரின் பாடு எப்படி யிருக்கும்? Harriet Harman என்ற புகழ்பெற்ற ஒரு பெண் வழக்கறிஞர் தொழிற் கட்சியின் நீண்டகால நாடாளுமன்ற உறுப் பினர். அவருக்கு துணைத் தலைவர் பதவி வழங்கப்பட்டு, அவர் நாடாளுமன்றம் வந்த போது "உன் கட்டிலை யாருடன் பகிர்ந்து கொண்டீர்கள்?" என்று ஒரு எதிர்க்கட்சி அரசியல்வாதி எதுவித நாகரீகமும் இல்லா மல் கொச்சையாகக் கேட்டாராம்.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் பெண் M.Pக்களைப் பற்றி பேசும் பிரிட்டிஷ் ஊடகங்களின் ஆண் நிருபர்கள் அந்தப் பெண் M.P யின் வெளித்தோற்றம், அவர் அணிந்துள்ள ஆடை, Hair Style ஆகியன பற்றி பேசிப்பேசியே நேரத்தை கடத்துகிறார்கள். அந்தப் பெண் M.P பேசிய விஷயங்கள் பற்றி அறிவிப்பது மிகமி கக்குறைவு. பெண் இனத்திற்கு பாரபட்சம் காட்டும் விதத்தில் பிரிட்டிஷ் ஆண்களும், சில மத்திய கிழக்கு ஷேக் நாடுகளின் ஆண்களும் ஒரேவிதமானவர்களே! ■







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# ஒத்திகையின் வழி சிறப்புறும் நடன நிகழ்வு

"தெய்வாத்தான் ஆகாதெனினும் முயற்சிதன் மெய் வருத்தக் கூலி தரும்" என்ற வள்ளுவன் கூற்றுக் கிணங்க, ஊழியின் காரணமாகவோ அல்லது புண்ணியமின்மையாலோ மேன்மையடைய இயலாத ஒருவன் தன் ஆளுமையின் மேன்மையை அடைய எண்ணும் நேரங்களில் எல்லாம் அவனை அறியாமலேயே முன்னேற்றபடிகளுக்கான ஒத்திகை ஆயத்தங்களை தன் மெய் வருத்தி பின்பற்றி நடக்கிறான். இங்கு அவனின் ஒத்திகைப் படலமானது அம் மனிதனின்த உயர்வு நிலையின் வெற்றியை அடைய மெய்வருத்தி உழைத்த காலப்பகுதியாகும்.

இங்கு ஒத்திகையானது எல்லா துறையினருக்கும் இன்றியமையாதது எனினும் என் அறிவினடிப்படையில் உலகின் சிறந்த ஆளுமையானவர்கள் கலைஞர்களே என்பேன். அப்படியானவர்கள் தங்கள் மேடை நிகழ்வுகளை அரங்கம் ஏற்றும் முன், வேள்ளோட்டாமாக பல ஒத்திகைகளை மேற்கொள்வார்கள். ஒத்திகையானது கலைக்குடும்ப சந்ததியினரின் வரலாற்றில் இன் றியமையாததாகும். ஒத்து+இருக்கை என்பதே ஒத்திகை. அதாவது நாடகம், நடனம், இசைக்கச்சேரி முதலியன நல்ல முறையில் ஒத்திருக்கின்றனவா அல்லது பின்னால் மேடையேற்றப்படப்போகும் நிகழ்வு முன்னதாக நிகழ்த்திப்பார்க்கும் முன்னோட்ட நிகழ்வக்கும்.



ஒத்திகையானது ஒரு மேடை நிகழ்வின் முள்ளந்தண்டிணைப்போன்றது, ஆக எந்தவொரு மேடை நிகழ்வாயினும் ஒத்திகைகள் இன்றி ஜொலிக்காது. மேலும் ஒரு நடனக்கலைஞர் என்ற ரீதியில் நடன ஒத்திகை ஒன்றினைப்பற்றி எடுத்தியம்ப எண்ணுவேனானால், ஒரு நடன நிகழ்வைனது வெறுமனே நடன ஒத்திகையினால் மாத்திரம் சிறப்புற்றிராது, "நட்சத்திரங்களுடன் கூடிய நிலவே இரவு வானை அலங்கரிக்கின்றது "அதுபோலவே எந்தவொரு நடக்கலைஞர் தன் நடன ஒத்திகைக்கு மட்டுமல்லாது மேடை, ஒளி, ஒலி மற்றும் நாட்டுவாங்கம், பக்கவாத்தியம், ஒப்பனை சார் அழகியல் ஒத்திகைகளுக்கும் சரிநிகர் முக்கியத்துவம் அளிக்கின்றாரோ அந்நிகழ்வே ஒத்திகையிலும் நிகழ்விலும் சிறக்கும்.

ஒரு நடன நிகழ்வில் கலைஞன் தன் ஆளுமைகளை, தன் கலைவெளிப்படுகளை முழுமையாக தர எண்ணுவான், அதற்கான மேடைப்பின்னணியிலான கலைஞரின் உழைப்பானது பல மடங்குகளாகும். சில சந்தர்ப்பங்களில் நிகழ்ச்சிகளைப் பார்க்கிலும் கூட ஒத்திகைகள் சிறந்து விளங்கிய சந்தர்ப்பங்களும் உண்டு. காரணம் மேடை நிகழ்வில் ஆள் பாதி ஆடை பாதி என்பதற்கினங்க, அனைத்து ஆடை, ஆபரண ஒப்பனைகளுடனும் மேடை அலங்காரங்களுடனும் காட்சி விதாணிப்புகழுடனும், பாட்டு பக்கவாத்தியங்களுடனும் ஒரு நேர்த்தியான நிகழ்வை பார்வையாளர் களுக்கு கலைஞரால் பிரசுவித்துவிட முடியும், எனினும் ஒத்திகையின்போது வெறுமனே பயிற்ச்சி உடையில், துளிர்த்த வியர்வையில் தெளிந்த உடலின் அசைவுகளும், முத்தெனச்சிரிக்கும் புன்னகையின் அழகும், ஒப்பனையற்ற இயல்பான முகபாவனைகளும் சில சமயங்களில் வியப்பூட்டும் சிறந்த வெளிப்பாட்டை தந்த சந்தர்ப்பங்களும் உண்டு.

எவ்வாராயினும் நடன ஒத்திகையின் போது கலைஞர்கள் தன்னால், தன் சரீரத்தல் வெளிப்படுத்தமுடியாத அசைவுகளையும் கூட தர எண்ணுவார்கள், ஆயினும் அவ்வாறான சந்தர்ப்பபங்களில் மிகவும் விழிப்புணர்வுடனும், தங்கள் உடல்நலம் கருத்தியும் கட்டாயமாக சித்திக்க வேண்டும் காரணம், 'சுவர் இருந்தருந்தால் மாத்திரமே சித்திரம் வரையலாம்'. மேலும் ஒத்திகைக்காலகட்டத்தில் கவனிக்கத்தக்காத்தோர் சில விடயங்களும் கையாளவேண்டும்.

அவையாவன. ஒத்திகையின் சரியான இடைவெளியிலும் உடலுட்டத்திற்கன போசக்கான சிற்றுணவுகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.

பயிற்சியின்போது இழக்கப்படும் நீர்ச்சத்துக்களை சரிநிகர்பேன ஏராளமான நீராகரங்களை பெறல்.

எப்பொழுதும் ஒத்திகைக்காலங்களில் முதலுதவி சாதனைகளை அருகில் வைத்துக்கொள்ளல்.

சிலகலைஞர்களுக்கு வயதினடிப்படையில், அல்லது கடின பயிற்சியினால் ஏற்படும் முழங்காள் கோளாறுகளை குறைக்க நெகிழ்வான முழங்கால் பட்டைகளை உபயோகப்படுத்த வேண்டும்.

கட்டாயம் ஒத்திகையில் தேவையான அம்சங்களைப்பற்றிய அறிவை நினைவுக்கூறவேண்டி குறிப்பு புத்தகத்தை பயன்படுத்தல்.

ஒரு ஆடையின் கடைசி நிமிட பழுதுப்பார்பு என்றாலும்கூட தையல் ஊசி, நூல் போன்ற சாதனங்களை உடன் வைத்திருத்தல் மிகமுக்கியமாக ஒத்திகையின் நடுவில் அல்லது ஒத்திகையின் ஈற்றில் சரியான ஓய்வு பெற்றுக்கொள்ளவேண்டும். ஆகையால் ஒரு நடனநிகழ்வு சிறப்புற ஒத்திகையின்றியமையாததோ அதே போல் ஒத்திகையில் கையாளவேண்டிய இந்தப் பண்புகளும் இன்றியமையாதனவே, ஆக ஒரு கலைஞனின் வாழ்வில் ஒத்திகைகள் வெறுமனே ஒத்திகைகளாக அமைந்துவிடாது.

" எடுத்த வினையை அரைகுறையின்றிச் செய்கடைமையை விட்டாரை உலகம் விட்டுவிடும் " என்பதற்கினங்க அரைகுறை பயிச்சி ஒத்திகைகள் ஒருபோதும் மேடைநிகழ்வை சிறப்புறச்செய்யாது. ஆக ஒத்திகையானது நடனநிகழ்விற்கு இன்றியமையா செய்வினையாகும்.



செல்வி
திவ்யகுமாரி சின்னையா
(லாஷ்ய கலாபவனம் நடனப்பள்ளி இயக்குனர்–இலங்கை)



23 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## உருத்திரமூர்த்தி - சிறு நண்டு மணல்...

‘வழியெல்லாம் கற்கள் வைத்தார் தமது
சுமையினை இறக்கிச் சும்மா நிற்க
பேரிய பழியெலாம் சுமக்க பாவியர் கூடி
வாயிலும் வளைவுமாய் வளர்ந்த
கோயிலும் கல் குடியிருந்தினரே’

பாதைகளில் வைத்த சுமைதாங்கிகள் வழிச்சுமையை சுமக்கவென்றும், வாழ்க்கைப் பழிச்சுமைதாங்க என்று ஆலயத்திலும் இது போல் ஒன்று இருக்குதென்றும் தானே விடையையும் தந்து செல்கிறார் இந்த கவிதையில்.

மஹாகவியின் பல கவிதைகளில் அசைவையும் மெலிதான இசையையும் இனம் கணலாம். அவை வாழ்க்கைத் தத்துவங்களோடும், தினசரிப் பெழுதுகளோடும் கைகோர்த்து படிப்போரின் மனமேடையில் நடமிடுவதை வாசகராய் நாம் உணரலாம்.

மூத்த ஈழக் கவிஞர்களில் ஒருவரான உருத்தரமூர்த்தி அவர்களுடைய 100 கவிதைகளை மித்ரா பதிப்பகம் ‘பொருள் நூறு’ என்னும் தலைப்பில் வெளிக்கொணர்ந்திருக்கிறது. கவிஞர், மஹாகவி என்ற புனைபெயரில் மட்டுமல்ல மாபாடி, பண்டிதர், மகாலட்சுமி, பாணன், வாணன் போன்ற பெயர்களிலும் எழுதி வந்தது குறிப்பிடத்தக்கது. கவிஞர் மஹாகவி யாழ்பாணத்துக் கிராம மக்களின் வாழ்வையே தனது பாடுபொருளாகிக் கொண்டவர். கிராமிய வழக்குச்சொற்களை கவிதைகளில் உட்புகுத்தினார். கற்பனாவாத அலங்காரச் சொல்லடுக்குகளும் செய்யுள்களும் எழுதப்பட்ட காலத்தில் மஹாகவி பேச்சுமொழியில், வாழ்க்கைப் பிரச்சனைகளையும் சமூக முரண்பாடுகளையும் யதார்த்தமாக பேசுபவையாக இருந்தன. காலத்திற்கேற்ப நாம் மாறவேண்டும் என்பதை வலியுருத்தியும் அப்படி மாறாதவை இலக்கை அடையாது என்பதையும் அவர் கவிதையொன்று சொல்கிறது.

‘அம்பு வில் மூதாதையர் கருவி
ஆதலால் அவைகளை அணிந்தவனாகப்
போர்களத் தெம்மூர்ப் பொடியன் வீரவான்
போயினான்”
ஏய்த அம்பேறி எதிர்தரப் பொருவனின்
காக்கிச் சட்டைப் பொத்தான் கழன்றது
வீரவான் விழுந்தான்” விலாவில்
ஓர் எழும்பின்றி ஒடித்தது குண்டே’

ஒரு கலைப்படைப்பில் கருத்துச் சொல்வது ஒரு நிர்ப்பந்தம் அல்ல என்றாலும் நவீன இலக்கியப் படைப்பாளிகள் பலர் சமூக அக்கறை குறித்து கேள்விகள் எழுப்பிய வண்ணமே இருக்கின்றனர். அதைப்போலவே மஹாகவியின் கவிதைகள் காத்திரமானவை அல்ல என்றும், மஹாகவி என்ற பெயர் தானே தமக்கு சூட்டிக்கொண்ட புனைபெயர் எனவும் பல விமர்சனங்களைத்தாண்டி கவிஞர் உருத்திரமூர்த்தி அவர்கள் மறுக்கப்படமாட்டாத இருபதாம் நூற்றான்டின் இறுதியில் எழுந்த ஒரு சாதனைக் கவிஞராகவும் ஈழத்துத்தமிழ் இலக்கியங்களில் மரபுக் கவிதையூடாகவும், புதுக்கவிதையினூடாகவும், அதிக அளவு மாறுதல்களை ஏற்படுத்தியவராகவும், கவிதை இலக்கிய மறுமலர்ச்சி வரலாற்றில் தம்மை நிலைநிறுத்திக் கொண்டுள்ளார்.

19 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## மனத்தளர்ச்சி என்றால் என்ன?

தான் இருக்கிறார்கள். மனத்தளர்ச்சி உள்ளவர்கள் உள்ளே ஆழ்ந்த கவலைகளையும் பிரச்சனைகளையும் எதிர் கொள்ளும் வேளையில் வெளியே ஒரு முகமூடியைப் போட்டு தாம் மகிழ்ச்சியாக இருப்பதாகக் காண்பிப்பார்கள். இதன் காரணத்தால் மனத்தளர்ச்சியின் அறிகுறிகளைச் சுற்றி இருக்கும் நபர்கள் இலகுவாகத் தெரிந்துகொள்ளமாட்டார்கள். அமெரிக்காவில் எடுக்கப்பட்ட ஒரு புள்ளியியல் படி மன நோய் உள்ள ஒருவர் உதவியை நாடிச்செல்வதுக்குக் குறைந்தது 10 வருடம் எடுக்குமாம். இதில் முக்கிய விஷயம் என்னவென்றால், நவீன உலகில் வாழும் நாம் இவ்வாறான மன நோய்களுக்கு ஏற்றவாறு தகுந்த சிகிச்சை முறைகளைப் பெற முடியும் என்பது தான். இந்த சிகிச்சை முறைகளின் உதவியுடன் நமது மூளையை மறுபடியும் சரியான முறையில் வேலை செய்யத் தூண்டலாம். எனவே மனத்தளர்ச்சி இருந்–தால் அதைப் போக்க வழியே இல்லை என்று மட்டும் எண்ணிவிடாதீர்கள்.

மனத்தளர்ச்சியைப் பற்றி யாருமே வெளிப்படையாகப் பேச முன்வரமாட்டார்கள். அதனால் தான் அதற்குரிய சிகிச்சையைக் கூட எவருமே சரியான நேரத்தில் பெறத் தவறுகின்றனர். எனவே உங்கள் சுற்றுவட்டாரத்தில் மனத்தளர்ச்சியில் அவதிப்படும் ஒருவரை நீங்கள் அறிந்தால் அவர்களுடன் கவனமாக, மெதுவாகப் பேசி அவர்களை மனத்தளர்ச்சி பற்றி அறிந்துகொள்ள ஊக்குவியுங்கள். ஏன், அவர்களுக்கு உங்கள் உதவியைக் கூட வழங்குங்கள், உதாரணத்திற்கு ஒரு தகுந்த சிகிச்சையாளரை தேடிக் கொடுங்கள் அல்லது அவரிடம் கேட்க வேண்டிய கேள்விகளை எழுதிக் கொடுங்கள். மனத்தளர்ச்சி உள்ளவர்களுக்கு இவ்வாறான முதல் படிகளை ஏறுவதே மிகவும் கஷ்டமாக இருக்கும். அந்த படி–களை ஏறுவதுக்கு நீங்கள் உதவினாலே போதும், மீதி இருக்கும் படிகளை அவர்களே ஏறி இந்த நோயைக் கட்டுப்படுத்திவிடுவார்கள். சிகிச்சையாளரிடம் போவதை அவமானம் என்று எண்ணுபவர்களுக்கு நீங்கள் சொல்லவேண்டியது ஒன்றே ஒன்று தான்: மனத்தளர்ச்சி என்பது ஆஸ்துமா அல்லது நீரிழிவு நோய் போல் பலரில் காணப்படும் ஒரு நோய் மட்டுமே. அது ஒரு பலவீனம் கிடையாது! அந்த நோயை “போ” “போ” என்று சொல்லிப் போக வைக்கலாம் என்று மட்டும் எண்ணக்கூடாது. அது போகாது!

13 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நிறை ஓதம் நீர் நின்று!

நல்லிசைக் காப்பியமான இளங்கோ எழுதிய இயற்றமிழ் ஓவியமாம் சிலப்பதிகாரத்தை மையப்படுத்தி அமைக்கப்பட்டது.

“இலங்கு பெரும் புகழ் தமிழ் காவியம் இன்ப சொல் ஓவியம் “ என பல்லவி ஆரம்பிக்க, கோவலன் – கண்ணகி , கோவலன்– மாதவி என பெண்ணெனும் பெருந் தெய்வமாய் விளங்கும் காப்பிய நாயகிகள் இருவரையும் அனுபல்லவி சித்தரிக்கிறது.

“ தேரா மன்னா செப்புவதுடையேன்“ என வழக்குரை காதை சிட்டைஸ்வர சாகித்யத்தில் தத்ரூபமாக வெளிக்கொணரப்பட்டது.

வர்ணத்தின் பிற்பகுதியில் சிலம்பு சொல்லும் செய்தியென ஒவ்வொன்றாக சிட்டைசெய்யப்பட்டு 4 ஸ்வர சாகித்தியத்துள் அடக்கப்பட்டது. இராகமாலிகையாக அமைந்த வர்ணத்தில் 4 ஜதிகள் சேர்க்கப்பட்டன. இதில் குறிப்பாக மாதவியை சித்தரிக்க முன்னதாக வரும் ஜதி மிகுந்த நுட்பமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. மாதவி பதினொரு வகை ஆடலை ஆடியதால் ஜதி கணக்கு முழுவதும் பதினொரு அட்சரமாக அமைந்துள்ளது . மாதவியின் ஆடலுக்கு பிரயோகிக்கப்பட்ட சொற்கட்டுகளை ஆய்ந்து அதனை மட்டுமே உபயோகித்து இந்த ஜதி ஆக்கப்பட்டுள்ளது. ஆகையால் பழம் பெரும் கூத்தின் தொனியை காட்டி நிற்கிறது. அதே போல இந்த ஜதிக்கு சேர்க்கப்பட்ட அசைவுகளும் மாதிவியின் ஆடலில் இருந்த அசைவுகளை ஆய்ந்து கோர்க்கப்பட்டுள்ளது.

இந்த வர்ணத்தில் உள்ள அனைத்து ஜதிகளுமே கதி பேதம் உள்ள கடினமான ஜதிகளாகவே அமைக்கப்பட்டு சிலப்பதிகாரத்தில் உள்ள ஆடலின் மகிமையை மறை பொருளாக தாங்கி நிக்கிறது.

தெய்வம் உண்டென்று தெரிந்திட வேண்டும். தேர்ந்த சான்றோரை துணை கொள்ள வேண்டும். தவம் செய்ய வேண்டும். தானம் செய்ய வேண்டும். பிறருக்கு துன்பம் தரும் காரியங்களை விட்டொழிக்க வேண்டும். பொய் சொல்லப் பயப்பட வேண்டும். புறங் கூறக் கூடாது, ஊன், உணவு உட்கொள்வதை, விலங்குகள் உயிர்க் கொலை செய்வதை கைவிட வேண்டும்.., தீயோர் நட்பு வேண்டாம், வாய்மையே வெல்லும், அறநூலோர், அறிவுடையோர் கூட்டத்தை விட்டகலாது நெருங்கியிருங்கள், மாற்றான் மனை விரும்ப நினையாதிருங்கள். துன்பப் படும் உயிர்களுக்குத் தொண்டு செய்து உதவுங்கள். கள், திருட்டு, காமம்,பொய் , பயனில சொல்வதை விட்டொழியுங்கள். அனைத்துக்கும் மேலாய் நிலையில்லாத பொருட்கள் மீது பற்றுக் கொள்வதில் பயனில்லை. அறநெறி பிழைத்தோர்க்கு அறமே கூற்றாகும். பத்தினி பெண்டிரை உலகமே போற்றும் என சிலம்பு சொல்லும் செய்தியாக மேற்சொன்ன விடயங்களை தாங்கி நிற்கிறது இவ்வர்ணம். தொல்லுதமிழ் தந்த திரவியத்தை நல்லியல் நாட்டியத்தில் கலந்திடச் செய்த ஐம்பெருங்காப்பிய மார்க்கத்தின் இரண்டாம் பகுதியை அடுத்த இதழில் எழுத முயல்கிறேன்.

யாமறிந்த புலவரிலே
கம்பனைப் போல்
வள்ளுவர் போல்,
இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே
பிறந்ததில்லை
உண்மை வெறும்
புகழ்ச்சி இல்லை
ஊமைகளாய் செவிடர்களாய்
குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒரு சொற் கேளீர்
சேமமுற வேண்டுமெனில்
தெருவெல்லாம்

தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்.



# வெற்றிமணியின் இதய அஞ்சலி!

## நாட்டுப்பற்றாளர் அமரர் தனம்ஜெயசிங்கம் பரராஜசேகரன்

அவர்களின் மறைவிற்கு வெற்றிமணியின் அஞ்சலி!
தோற்றம்: 07.02.1956 – மறைவு: 02.06.2022

கண்ட நாள் முதலாய் நண்பர்களானோம் ( 1985 முதல்) இன்பம் துன்பம்எதுவானாலும் துணிந்து நின்றாய்
தமிழ் நிலைக்க தமிழோடும் தன்மானத்தோடும் நிமிர்ந்து நின்றாய்.
லூடின்சைட் நகர தமிழாலய நிர்வாகியானாய் மாணவர் தமிழ் கற்க மனமாக, கனமாக உழைத்தாய்.
காலையும் மாலையும் தினமும் கண்டுபுன்னகை இதழ் விரிக்க முகம் மலர்ந்தாய்.
இன்று காலன் உன்னை திடு திடு என்று அழைத்ததேனோ!
ஆறுதல் பெறுவது எப்படியோஉன் ஆத்மா சாந்தியடையட்டும். நிறைவான வாழ்வு கண்டு செல்கிறாய்.
செல்லும் இடம் புதிதல்ல, யாவரும் செல்லும் இடமே என்பதால் மனதில் ஆறுதல் பெறுவோமா?

அன்பு நண்பன் சிவக்குமார் : “நீ இப்படித்தானே அழைப்பாய் இந்த சிவகுமாரனை”.

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# ரஜினியுடன் இணைந்து நடிக்க நான் தயார்

'விக்ரம் இப்படம் பெரும் வெற்றி பெற்றதை அடுத்து,சென்னையில் செய்தியாளர்களிடம் நடிகர் கமல்ஹாசன் கூறியதாவது,'விக்ரம்' படத்தின் வெற்றியை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நாடு முழுவதும் இப்படம் வெற்றி பெற்றிருக்கிறது.

நான் நடித்த 'அபூர்வ சகோதரர்கள்' திரைப்பட வெற்றியின்போதும் சந்தோஷமாக இருந்தேன். அந்த படம் உடனடியாக இல்லாமல் 6 மாத இடைவெளிக்கு பிறகு இந்திக்கு சென்றது. அங்கும் கொண்டாடினார்கள். 'அவ்வை சண்முகி' படமும் இந்திக்கு சென்று வெற்றி பெற்றது.

'ஏக் துஜே கேலியே' படத்துக்கு கிடைத்த வரவேற்பு போல, தற்போது நாடு முழுவதும்'விக்ரம்' திரைப்படம் வரவேற்பை பெற்றுள்ளதில் மகிழ்ச்சி." ரஜினி யுடன் இணைந்து நடித்து வருடங்கள் ஆகிவிட்டன.

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் நீங்கள் ரஜினியுடன் இணைந்து நடிப்பீர்களா?'' என்று கேட்கின்றனர். முதலில் இதை அவரிடம் (ரஜினி) கேட்க வேண்டும்.

அவர் ஒப்புக்கொண்ட பிறகு, இவரிடம் (லோகேஷ்) கேட்க வேண்டும். நாங்கள் 3 பேரும் ஒப்புக் கொண்ட பிறகு உங்களிடம் (மீடியா) சொல்ல வேண்டும். ரஜினியுடன் நடிக்க நான் எப்போதும் தயார்

# எனக்கும் உனக்கும் தான் பொருத்தம்



சினிமாவில் எம்.ஜி.ஆருக்கு பொருத்தமான ஜோடியாக ஜெயலலிதா ரசிகர்களால் கொண்டாடப்பட்டது. சினிமாவைத்தாண்டி சொந்த வாழ்கையிலும், அரசியல் வாழ்க்கையிலும் ஜெயலலிதா மீது தனிப்பட்ட அக்கறையும், கவனமும் செலுத்தினார் எம்.ஜி.ஆர். ஆனால்... சினிமாவில் எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா ஜோடிப் பொருத்தம் கொண்டாடப்பட்ட வேளையில் விமர்சனங்களும் எழாமல் இல்லை. எம்.ஜி.ஆர்.– ஜெயலலிதா முதன்முதலாக இணைந்து நடித்த 'ஆயிரத்தில் ஒருவன்' படத்தில் இளமைத்துள்ளலான அவர்களின் காதல் காட்சிகளைப் பார்த்துவிட்டு, எம்.ஜி.ஆருக்கும், ஜெயலலிதாவிற்குமிடையே இருக்கும் மிகப்பெரிய வயது வித்தியாசத்தைக் குறிப்பிட்டு கடுமையாக சில விமர்சகர்களும், பத்திரிகைகளும் எழுதினர்.

எம்.ஜி.ஆர்.– ஜெயலலிதா ஜோடிப் பொருத்தத்தை விமர்சித்தவர்களுக்கு 'முகராசி'யில் கண்ணதாசன் வேட்டு வைத்தார் பாட்டால்...

**"எனக்கும் உனக்கும்தான் பொருத்தம்,**
**இதில் எத்தனை கண்களுக்கு வருத்தம்**
**நம் இருவருக்கும் உள்ள நெருக்கம்**
**இனி யாருக்கு இங்கே கிடைக்கும்"**

# தலைக்கனம் பிடித்த ராஷ்மிகாவாக!

தெலுங்கு இயக்குநரான வம்சி பை டிபள்ளி இயக்கத்தில், விஜய், ராஷ்மிகா மந்தனா மற்றும் பலர் நடிக்கும் பெயரிடப்படாத விஜ யின் 66ஆவது படத்தின் படப்பிடிப்பு பரபரப்பாக நடைபெற்று வருகிறது.

இப்படத்தில் விஜய் ஜோடியாக ராஷ்மிகா மந்தனா முதன்முறையாக நடிக்கிறார். சிறு வயதிலிருந்தே விஜய்யின் ரசிகையாக இருக்கும் ராஷ்மிகா நடிக்க வந்தது முதலே விஜயுடன் ஒரு படத்திலாவது நடிக்க வேண்டும் என்ற ஆசையில் இருந்ததாக சமீபத்திய பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார். மேலும் அப்பேட்டியில் விஜய் 66 படத்தில் தன்னுடைய கதாபாத் திரம் பற்றிய தகவல் ஒன்றையும் தெரிவித்துள்ளார்.

படத்தில் சுயநலமிக்க, தலைக்கனம் பிடித்த பெண்ணாக ராஷ்மிகா நடிக்கிறாராம். அக்கதாபாத்திர த்தில் நடிப்பது சவாலான ஒன்றாக இருப்பதாக ராஷ்மிகா கூறியி ருக்கிறார்.



# இள வயது ரஜினியாக சிவகார்த்திகேயன்



விஜயின் பீஸ்ட் படத்தை இயக்கிய நெல்சன் திலீப்குமார் அடுத்ததாக ரஜினியின் 169ஆவது படத்தை இயக்கப் போகிறார். அனிருத் இசையமைக்கிறார். இந்தப்படத்தில் நடிக்க ரஜினியிடம் நெல்சன் சொன்ன கதை அவருக்கு பிடித்து விட்ட போதும், பீஸ்ட் படம் எதிர்பார்த்தபடி வெற்றி பெறாததால் அதிருப்தி அடைந்தார் ரஜினி.

அதனால் தனது ஆஸ்தான இயக்குநரான கே.எஸ்.ரவிக்குமாரை தனது 169ஆவது படத்திற்கு திரைக்கதை எழுத வைத்துள்ளார்.

மேலும் இந்த படத்தில் சிவகார்த்திகேயன், பிரியங்கா மோகன் ஆகியோர் நடிப்பதாக ஆரம்பத் திலிருந்தே செய்திகள் வெளியாகின. ஆனால் ஒருகட்டத்தில் சிவகார்த்திகேயன் இந்தப் படத்தில் நடிக்கவில்லை என்று கூறப்பட்டது. இப்போது படத்தில் இளம் வயது ரஜினி வேடத்தில் சிவகார்த்திகேயனை நடிக்க வைக்க நெல்சன் முடிவெடுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அதோடு அரபிக்குத்து பாடலைத்தொடர்ந்து இந்த படத்திலும் சிவகார்த்திகேயன் ஒரு பாடல் எழுதுவதாக கூறப்படுகிறது.







Jasmine Silk House
ஆடைகளின் ராணி
திருமண பட்டுப்புடவைகள்
புத்தம் புதிய டிசைன்களில்
மங்கையர் மனங்கவரும்
சேலைகள் சிறுவர்களுக்கான
ஆடைகள், பஞ்சாபிகள்,
குர்த்தாக்கள், இன்னும்
இமிற்றேசன் நகைகள்
அனைத்தும்
ஒரே இடத்தில் பெற்று
மகிழ நாடுங்கள்.
என்றும் சிறப்பு விலை
தொடர்பு இலக்கம்: 01731937325
Tel: 02102 844744
HP: 0173 1937 325
"Jasmine Silk House"
Fester Str.50- 40882 Ratingen


Asia Bazar
துரித பணமாற்றுச்சேவை
ஆசிய, ஆபிரிக்க உணவு வகைகள்
வியாழன், சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள் கடல் உணவுப்
பொருட்கள் இன்னும் பல...
உரிமையாளர்: பா.கணேஷ்
Ria
VALUTRANS
MoneyGram
An der Stadt Mauer 2-4 41061 Mönchengladbach
Tel: 02161 208303 | Fax: 02161-309282


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
Stuttgart தனில்...
Ludwig str.87a
70197
Stuttgart
சிறப்பு
விலையில்
அழகிய
சேலைகள்
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்றேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
SALE
Tel: 0711 615 8976/ 0170 334 4059


செல்வராஜா
SELVARAJA GOLD HOUSE
நகைகள் அனைத்தும்
நம்பமுடியாத விலைக்கழிவில்
162 b Mitcham road | London | sw 17 9NJ
Tel: 0208 767 3795 | 078 25 005 269


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
புதிய
இடத்தில்!!!
புதிய
பொலிவுடன்!!
069-97 693 374
info@saravanaabhavan.de
kaiserstraße 68, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K France Germany Australia South Africa Canada U.S.A


STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM
அ.க.ம்
Nila
Double Horse
Aachi
BTM
Rabeena
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696| Fax: 0231/8602698